இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021-222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர்: 136 இதழ்: 11 பக்கங்கள்: 08 திகதி 24-06-2012 விலை: 15.00

# இன்றைய இளையோர் விமர்சனங்களை கடந்து, கலாசாரங்களை மதித்து கல்வியிலும், பண்பிலும் வளர முன்வர வேண்டும்

## பருத்தித்துறை மறைக்கோட்ட கத்தோலிக்க இளையோர் ஒன்றுகூடலில் பருத்தித்துறை பிரதேச செயலர்

இளைய சமூகத்தினர் தம்மீது முன்வைக்கப் பட்டுள்ள விமர்சனங்களை சீர்தூக்கிப் பார்த்து, சமுதாயத்திலும், பாடசாலையிலும், குடும்பத்திலும் நல் அறிவு படைக்கும் பண்புள்ள இளையோராக மிளிர வேண்டும் என பருத்தித்துறை மறைக் கோட்ட இளையோர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "கலை மாலை பொழுது" என்னும் இளையோர் எழுச்சி நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த பருத்தித்துறை பிரதேச செயலர் திரு.இ.த.ஜெயசீலன் தெரிவித்தார்.




மேலும் எமது இளைய சமூகத்தினர் இவ்வாறான ஆலய, மறைக்கோட்ட ஒன்று கூடல்கள் மூலம் கிறிஸ்தவ விழுமியங்களை அறிந்து அதனை வாழ்வாக மாற்ற இந் நிகழ்வுகள் ஓர் களமாக அமைந்துள்ளது எனவும் கூறி இந் நிகழ்வினை ஏற்பாடு செய்த பருத்தித்துறை மறைக்கோட்ட இளையோர் ஒன்றியத்தினையும் வாழ்த்தினார்.

இந் நிகழ்வானது யூன் மாதம் 17ம் திகதி ஞாயிறு மாலை 5 மணிக்கு பருத்தித்துறை தூய தோமா கலையரங்கில் நடைபெற்றது. பான்ட் இசை முழங்க பருத்தித்துறை மறைக்கோட்டத் தைச் சேர்ந்த ஒன்பது பங்குகளில் இருந்து பெரும் எண்ணிக்கையில வருகை தந்திருந்த சுமார் 400 இளைஞர்கள், யுவதிகள் கைகளில் கொடிகளை ஏற்றி பவனியாக விருந்தினர்களை அழைத்து வந்தனர். பின்னர் தமிழ் கலாச்சார நாதஸ்வர இசை முழங்க ஆராத்தி எடுத்து மாலை அணிவித்து வரவேற்கப்பட்டு, மறைமாவட்ட, மறைக்கோட்ட இளையோர் மன்ற கொடிகள் ஏற்றப்பட்டு இறை வணக்கத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பருத்தித்துறை கத்தோலிக்க இளையோர் ஒன்றிய தலைவர் திரு. ஜெபதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பருத்தித்துறை மறைக்



கோட்ட இளையோரின் ஆக்கங்களை தாங்கிய "துறை" என்னும் சஞ்சிகையும் வெளியிட்டு வைக் கபபட்டது. மேலும் இச் சஞ்சிகைக்கான ஆய்வுரையினை வழங்கிய சிறப்பு விருந்தினர் திரு யோண்சன் ராஜ்குமார் இளையவர்கள் அன்னப் பறவை போன்று சமகால தீமைகளை களைந்து நன்மைகள் நோக்கிய பாதையில் பயணிக்க அழைப்பு விடுத்தார்.

மேலும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்த யாழ் மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநர் அருட்பணி. இரவிச்சந்திரன் அடிகளார் எமது இளைஞர்கள் தமது ஆற்றல்கள் திறமைகளை இவ்வாறான கலை நிகழ்வுகள் ஊடாக

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## வாழ்த்துகின்றோம் நம் ஆயரை

தேவ மாடத்தின் தெய்வ தரிசனமே
தோமஸ் ஆண்டகை திருவின் உருவமே
திருச்சபைத் தோட்டத்தின் நறுமணக் கொழுந்து
தன்னிகர் இல்லா இறைபணியாளன்




பூமிதனில் எங்கள் ஆயர்
பொற்பாதம் பதித்ததுவும்
ஆயர் பெருமகனாய்
ஆரம் அணிந்ததுவும்
யாழ் மண்ணின் ஆயராக
யாதவம் தொடங்கியதுவும்
யூலைத் திங்கள் என்று
வரலாறு வியத்து காணும்

புனித தோமையார் திருநாமம்
தனதாக்கி மிளிரும் எம் ஆயர்
புனிதரின் பெருவிழா யூலையில்
களிப்புடன் ஒளிரும் நன்நாளில்

இறைவன் ஆசி வேண்டியே
இருகரம் கூப்பி வாழ்த்தி நின்று
பன்னீர் மலர்கள் பல தூவி
மண் களிக்க மனம் குளிர
பல்லாண்டு கூறி வாழ்த்துகின்றோம்.

## பற்றைக்காட்டுக்குள் பரிதவிக்கும் இத்தாவில் தூய. பாப்பிரா அம்மா ஆலயம்

முகமாலைப் பங்கின் மிகவும் பிரசித்தி பெற்ற பழமைவாய்ந்த தூய பாப்பிரா அம்மா ஆலயம் இத்தாவில் பகுதியில் காணப்படுகின்றது. கடந்த ஏழு வருடங்களாக கொடிய போரின் வடகள முனைப் பகுதியாக காணப் பட்ட இப்பகுதி கடந்த மாதம் விடுவிக்கப்பட்டது. இப்பகுதி முழுவதும் கண்ணி வெடிகளும், வெடித்தும், வெடிக்காததுமான பல் குழல் எறிகணைகளும் காணப்பட்டது. தற்போது இப்பகுதிகளுக்கு மக்கள் மீள்குடியமர அனுமதிக் கப்பட்ட நிலையில், வெறும் பற்றைக் காடுகளாக காணப் படும் தமது





இருப்பிடங்களை அடையாளம் கண்டு கொள்ள மக்கள் பெரும் சிரமப் பட்டனர். இப்பகுதியில் அமைந்துள்ள தூய பார் பிரா அம்மாள் ஆலயமும் பற்றைக்காடுகள் நிறைந்து



முற்று முழுவதுமாக சேதமடைந்து காணப்படுகின்றது. இதனை பார்வையுற்ற இப்பகுதி மக்கள் கண்ணீர் விட்டு அழுதனர். அழகு இழந்து சிதைந்து போய் உள்ள ஆலயத்தினை மீளவும் புனர்நிர்மானம் செய்து வழிபாடுகளை ஆரம்பிக்க மக்கள் ஆர்வத் துடன் காத்து நிற்கின்றனர்.

## புனித தோமையாரின் பெயர் கொண்ட ஆயர் தினம்

யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் முக்கிய தினங்கள் அனைத்தும் யூலை மாதத்திலேயே அமைகின்றன.

யூலை மாதம் 3ம் திகதி புனித தோமையார் பெயர் கொண்ட தினத்தையும் யூலை 6ம் திகதி யாழ் ஆயராக நியமனம் பெற்ற தினத்தையும் 13ஆம் திகதி பிறந்த தினத்தையும் 30ஆம் திகதி யாழ் ஆயராக அபிசேகம் செய்யப்பட்ட தினத்தையும் யாழ் ஆயர் கொண்டாடி மகிழ்கின்றார். இவை அனைத்தையும் ஒருமுகப்படுத்தியே ஆயர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் யூலை 2ம் திகதி திங்கள் கிழமை காலை 9 மணிக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில ஆயர் தலைமையிலான பாடசாலை மாணவர்களுடனான நன்றித் திருப்பலி இடம்பெறவுள்ளது. இத்திருப்பலியை யாழ். மறைக்கல்வி நடுநிலையம் ஒழுங்குசெய்கின்றது.

# எமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்

## கத்திக்குத்தும்-வாள்வெட்டும் எதற்கு?

யாழ் மாவட்டத்தில் சமீபகாலமாக இடம்பெறும் சமூகச் சீரழிவுகள் மனவேதனை தருகின்றன. வாள்வெட்டு கத்திக் குத்து, அடிதடி, என்று மிகவும் கீழத்தரமான செயற்பாடுகளில் இளைஞர்கள் ஈடுபடுகின்றனர். கல்விக்கும் ஒழுக்கத்துக்கும் பெயர் பெற்ற யாழ்ப்பாணத்தில் இப்படியும் சீரழிவா என்று பலர் ஏங்குகின்றனர். வெட்கப்படுகின்றனர்.

ஒரு காலத்தில் வேறு மாவட்டங்களுக்கு முன் உதாரண மாக இருந்த யாழ்ப்பாணத்தில் தற்போது ஏன் இந்த நிலை என்று நினைத்து எவரும் கவலைப்படாமல் இருக்க முடியாது. யுத்தம் நடைபெற்ற காலத்தில் இருந்த ஒழுக்கம் தற்போது இல்லை. தேசிய உணர்வுக்கு முக்கியமளித்து தமிழ் இனத்தின் அரசியல் உரிமைகள் அபிலாஷைகள் வென்றெடுக்கப்பட வேண்டும் என அப்போது சகலரும் எண்ணியிருந்த காலம். எரிபொருட்கள் இன்றி, போதிய உணவுகள் இன்றி அதாவது உரிய வசதி வாய்ப்புகள் எதுவுமே இல்லாத ஒரு கால கட்டத்தில் யுத்த நெருக்குவாரங்களுக்கு மத்தியில் சிறந்த கல்விப்பேறுகளை காணமுடிந்தது. ஒழுக்கமுள்ள இளைஞர்களை காணமுடிந்தது, பண்பான சமூகத்தைக் காணமுடிந்தது. ஒழுக்கமுள்ள பெற்றோரை காணமுடிந்தது. ஆனால் இன்று அவற்றுக்கு என்ன நடந்தது? நவீன மாற்றங்கள் நவீன தொழில் நுட்ப சாதனங்கள் கொழும்பிலும் வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளிலும் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் தமிழ் மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள் அவற்றின் நிறம்கூட தெரியாது இருப்பதை வைத்து கல்வி கற்று சித்தியடைந்தார்கள், முன்னேறினார்கள் முழு உலகமுமே வியந்தது. இத்தனை நெருக்குவாரங்கள், ஒடுக்குமுறைகளுக்கு மத்தியில் தமிழ்ச் சமூகத்தின் முன்னேற்றம், பொறுமை மற்றயவர்களுக்கு உதரணமாக விளங்கியது. ஆனால் இன்று தினமும் பத்திரிகைச் செய்திகளை வாசிக்கும்போது இதுதானா தமிழர்களின் பண்பாடு என்று எண்ண தோன்றுகின்றது. யுத்தம் முடிவடைந்து விட்டது என்றும் யுத்தத்தின் பின்னரான கால கட்டம் என்றும் பலர் கூறுகின்றனர். சர்வதேச நாடுகள் கூட யுத்தத்தின் பின்னரான காலகட்டம் என கூறுகின்றன. அதாவது இந்த காலப்பகுதியில் நிரந்தர அரசியல் தீர்வு, யுத்தம் இடம் பெற்ற பிரதேசங்களில் அபிவிருத்தி போன்ற விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என அவர்கள் எண்ணுகின்றனர்.

ஆனால் அவ்வாறு இல்லை. ஆயுதத்தை கையாண்ட யுத்தம் அழிக்கப்பட்டு விட்டது அதன் பின்னரான காலகட்டம் என்பது வேறு வகையான யுத்தம் ஒன்றை திணித்துள்ளது. பண்பாடு, நாகரீகம், ஒழுக்கம் ஆகிய மரபுசார்ந்த சமூக கட்டுப்பாடுகள் கட்டவிழ்க்கப்பட்டு அவை தலைவிரித்தாடுகின்றன. நவீன தொழில்நுட்ப சாதனங்களின் வருகைதான் இதற்கு காரணம் என்று கூறமுடியாது. நவீன தொழில்நுட்ப சாதனங்கள் என்பது உலகம் ழுமுவதிலும் உண்டு. யுத்தத்தின் பின்னரான காலகட்டத்தில் இவை யாழ்ப்பாணத்திற்கும் கொண்டு வரப்பட்டுள்ளது என்பது உண்மை. ஆனால் வாள்வெட்டும், கத்திக்குத்தும், அடிதடியும் பெண்களை இழுத்துக் கொண்டு ஓடுகின்ற ஒழுக்கமற்ற செயற்பாடுகளும் நவீனதொழில் நுட்ப சாதனங்களின் வருகையினால், இணையத்தள பாவனைகளினால் வந்தது என்று கூற முடியாது. மாறிவரும் உலகில் அவ்வாறான தொழில்நுட்ப சாதனங்கள் தமிழச் சமூகத்துக்கு தேவை. குறிப்பாக இளைஞர்களுக்கு அது அவசியம்.

ஆனால் கட்டுப்பாடுகளை பேண வேண்டியது எமது பொறுப்பு. ஒரு சமூகத்தின் நில உரிமைகளை, அழிப்பதற்கும் அந்த சமூகத்தின் அரசியல் கோரிக்கைகளின் முக்கியத்துவத்தைகுறைப்பதற்கும் அந்த சமூகத்தின் பண்பாட்டு தளத்தை சீரழித்தால்போதும். அந்த அடிப்படையில் தான் யாழ்ப்பாணத்தில் சமீபகாலமாக இடம் பெறும் சம்பவங்களை நோக்க வேண்டியுள்ளது. ஆகவே உணர்ந்து செயற்பட வேண்டும். விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டியது பெரியவர்களின் பொறுப்பு.

அருட்பணி. எஸ். எயின்சிலி றொஷான்

## இராணுவத்தினரின் இருப்பு சிறார்களை பாதிக்கின்றது

இலங்கையில் போர் இடம்பெற்ற பகுதிகளில் இராணுவத்தினர் தொடர்ந்து இருப்பது சிறார்களின், மனங்களிலிருந்த போரின் வடுக்கள் ஆறுவதைத் தடுக்கிறது என Save the children அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி மேனகா கல்யாணரத்தினர் தெரிவித்துள்ளார்.

இலங்கைத்தீவில் போர் இடம்பெற்ற பகுதிகளில் சிறார்களின் நிலவரம் குறித்த நிகழ்ச்சியொன்றில் ஆஸ்திரேலிய ஊடகமொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போது இத்தகவலை அவர் தெரிவித்தார். இலங்கையில் போர் இடம்பெற்ற பகுதிகளில் இராணுவத்தினர் தொடர்ந்து இருப்பது சிறார்களின், மனங்களிலிருந்த போரின் வடுக்கள் ஆறுவதை தடுக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

## முதியோர் துன்புறுத்தப்படுவது குறித்த முதல் உலக விழிப்புணர்வு நாள் (ஜூன் 15)

உலகில் வாழும் வயதானோரில் 4 முதல் 6 விழுக்காட்டினர் ஏதாவது ஒருவகையில் துன்புறுத்தப்படுகின்றனர் என்று ஐ.நா.பொதுச்செயலர் பான் கி முன் கூறினார்.

முதியோர் துன்புறுத் தப்படுவது குறித்து விழிப் புணர்வை ஏற்படுத்துவதற்கென ஐ.நா.வால் இவ் வெள்ளியன்று கடைப்பிடிக்கப்பட்ட முதல் உலக நாளுக்கென செய்தி வெளியிட்ட பான் கி மூன், உடல், உணர்வு, பணம் என முதியோர் பல வகைகளில் துன்புறுத்தப்படுகின்றனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

முதியோரின் மனித மாண்பு மற்றும் மனித உரிமைகளைத் தாக்கும் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை என்று கூறும் அவரின் செய்தி, சமுதாயததின் ஒருங்கிணைந்த அங்கங்களாக முதியோர் மதிக்கப்படுமாறு வலியுறுத்தியுள்ளார்.

## உலகின் தேவையான அளவு உணவு இருந்தாலும் அது சரிவரப் பகிரப்படுவதில்லை – திருத்தந்தை

உலகில் தேவையான அளவு உணவு இருந்தாலும், அரசியல், பொருளாதார, சமுதாயத் தடைகள் பெருகியுள்ளதால், இந்த உணவு சரிவரப் பகிரப்படுவதில்லை என்று திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கூறினார்.

FAO எனப்படும் ஐ.நா.வின் உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத்தின் இயக்குனர் Jose Graziano da Silva, அவர்களை இவ் வியாழன் காலை திருப்பீட்தில் சந்தித்தத் திருத்தந்தை, உலகில் நிலவும் உணவு பற்றாக்குறை பற்றி அவருடன் பேசினார்.

உலகின் பல பகுதிகளில், சிறப்பாக ஆபிரிக்கக் கண்டத்தில் வறுமையையும், பசியையும் போக்க திருஅவை எடுத்துவரும் முயற்சிகளுக்காக FAO இயக்குனர் தன் பாராட்டுக்களைத் திருத்தந்தைக்குத் தெரிவித்தார்.

உணவுப் பொருட்களின் பரிமாற்றம் உலகெங்கும் தகுந்த வகையில் நடைபெற வேண்டும் என்று இச்சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டது.

திருத்தந்தையைச் சந்திதத பின், FAO இயக்குனர் Da silva, திருப்பீடச் செயலர் கர்தினால் தர்ச்சிசியோ பெர்தோனே, மற்றும் திருப்பீட நாடுகளுடனான உறவுகளின் செயலர் பேராயர் தொமினிக்க மம்பெர்ததி ஆகியோரையும் சந்தித்தார்.

## ஆயுத வியாபாரத்தை நிறுத்துமாறு ஆசிய ஆயர்கள் உலகத் தலைவர்களுக்கு அழைப்பு

உலகில் இடம் பெறும் மனித உரிமை மீறல்களுக்கு முக்கிய காரணமாக ஆயுத வியாபாரம் இருக்கின்றது என்று சொல்லி, ஆயுத வியாபாரத் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு உலகத் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளனர் ஆசிய ஆயர்கள்.

ஐ.நா.வால் கொண்டுவரப்பட்ட ஆயுத வியாபாரத் தடை ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக வருகிற ஜுலை 2ம் திகதிக்கும் 27ம் திகதிக்கும் இடைப்பட்ட நாள்களில் நியூயோர்க்கில் உலக வல்லரசுகள் கூட்டம் நடத்தவிருப்பதையொட்டி ஆசிய ஆயர்கள் இவ்வழைப்பை முன்வைத்துள்ளனர்.

FABC என்ற ஆசிய ஆயர் பேரவைகள் கூட்டமைப்பின் மனிதவள மேம்பாட்டு ஆணையத் தலைவர் பேராயர் charles Bo வெளியிட்டுள்ள விண்ணப்ப அறிக்கையில், ஆயுத வியாபாரத்தை நிறுத்துவதற்கு ஆசிய ஆயர்கள் முன்வைத்துள்ள குறிப்புக்களையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

## மிக அதிக அறிவுத்திறன் கொண்டிருப்பவர் ஒரு தமிழ் நாட்டுச் சிறுமியே

IQ எனப்படும் அறிவுத்திறன் அளவில் உலகிலேயே மிக அதிக அறிவுத் திறன் கொண்டிருப்பவர் ஒரு தமிழ் நாட்டுச் சிறுமி என்று ஊடகங்கள் கூறியுள்ளன.

திருநெல்வேலிக்கு அருகில் உள்ள பாளயம் கோட்டையில் வாழும் விஷாலினி என்ற 11 வயது சிறுமி உலகிலேயே மிக அதிக அளவு அறிவுத் திறன் பெற்றவர் என்று கூறப்படுகிறார்.

இவருக்கு தற்போது 11 வயதே நிறைந்துள்ளதால், இவரது உலக சாதனை தறபோது கின்னஸ் சாதனைப் பட்டியலில் இடம்பெறாது எனறும் இவருக்கு 14 வயதாகும் போதே இதந்தச் சாதனை இடம்பெறும் என்றும் ஊடகங்கள் கூறுகின்றன.

எட்டாம் வகுப்பில் பயிலும் விஷாலினி, கணனியில் அபூர்வ அறிவுபெற்றவராய் இருக்கிறார். இவரது அறிவுத்திறனால், பல பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு சொற்பொழிவுகள் வழங்கி வருகிறார்.

தற்போது உலக அளிவல் மிக உயர்ந்த அறிவுத்திறன் கொண்டவர் என்று கருதப்படுபவர் கொரியாவைச் சேர்ந்த Kim Ung - Yong. இவரது அறிவுத்திறன் அளவு 210. இதுவே தற்போது உலகசாதனையாக உள்ளது. விஷாலினியின் அறிவுத்திறன் அளவு 225 என்பது குறிப்பிடத்தக்கது.

அறிவியல் மேதை ஆல்பர்ட் ஐன்ஸ்டைனின் அறிவுத்திறன் அளவு 160 என்றும், லியோனார்டோ டாவின்சியின் அறிவுத்திறன் 200 என்றும் சொல்லப்படுகிறது. இக்காலக் குழந்தைகளுக்கு IQ பொதுவாக அதிகமாகவுள்ளது.

# பார்வைகளும் பாவங்களும்

அருள்திரு இராசேந்திரம் ஸ்ரலின்



'பதின்மூன்று வயதுச் சிறுமியை ஏமாற்றி அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்ததால் தந்தை கைது.

'மகள் ஆபாசப்படச் சீடிக்கள் வைத்திருந்ததைக் கண்ட தந்தை அதிர்ச்சியால் தற்கொலை முயற்சி.

'சிறுவர் இல்ல நிர்வாகி சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்தமைக்காகக் கைது.

'கத்தோலிக்க மாணவர்கள் மூவர் சேர்ந்து ஒரு மாணவியை வல்லுறவுக்கு உட்படுத்தியமைக்காகக் கைது.

'சிசுவொன்று பற்றைக்குள் கண்டெடுக்கப்பட்டது. திருமணமாகாத இளம் பெண் கைது.

'இங்கிலாந்தில் பிக்கு ஒருவர் சிறுமியயைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்தமைக்காக ஏழு வருடச் சிறைதண்டனை.

'பிக்குவின் அறையுள் நீலப் படங்கள். சக பிக்குவின் முறைப்பாட்டில் கைது"

'கைத்தொலைபேசியில் ஆபாசப் படம் வைத்திருந்தவருக்கு 8 ஆயிரம் ரூபா குற்றம்.

'பஸ்சிற்குள் இளம் பெண்ணோடு தவறாக நடக்க முனைந்தவர் நையப் புடைப்பு.

இவை போன்ற பல செய்திகள் அண்மைக் காலங்களாக அதிகரித்து வருவதைப் பத்திரிகைகள் வழியாகவும் பிறர் சொல்லக்கேட்டும் அறிகின்றோம். மேலும், இலங்கையில் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் பெருகுவதற்கு பாலியல் இணையத் தளங்களே காரணம் என்பதை உணர்ந்து அத்தகைய 300 இணையத் தளங்கள் இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ளது. பிரான்ஸ் நாட்டில் இப்படங்களின் தீமைகளை உணர்ந்து இப்படங்கள் தயாரிப்பதற்கு உச்சமான வரிவிதித்து அதன் உற்பத்தியைக் கட்டுப்படுத்த முயல்கின்றனர். இவை நமக்கு ஒரு கண்விழிப்பாக அமைய வேண்டும். தவறான பாலியல் நடத்தைகளுக்கான காரணிகள் பலவாக இருந்தாலும் இவர்கள் எதைப் பார்க்கின்றார்கள் என்பதும் முக்கிய காரணியாக அமைகின்றது. இவர்கள் பார்க்கும் ஆபாசக் காட்சிகள் அவர்கள் மனதில் ஆழமாகப் பதிந்து அதே போன்ற நடந்தைகளில் இவர்கள் ஈடுபடக் காரணமாகிவிடுகின்றது.

புனித மரிய கொறற்றி சிறுமியாயிருந்தபோது அலெக்சாண்டர் என்ற இளைஞன் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முனைந்தார். சிறுமி மறுத்தபோது பல தடவைகள் கத்தியால் குத்திக் கொலை செய்தார். இவரது வாழ்வை ஆராய்ந்தபோது ஒரு விடயம் வெளிவந்தது. இவரது அப்பா தன் அறைக்குள் ஆபாசப்படங்களை நிறைய வைத்திருந்துப் பார்க்கின்ற பழக்க முடையவர். இதனை சிறுவனான அலெக்சாண்டர் அப்பா இல்லாத நேரத்தில் பார்க்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தான். அவன் இவ்வாறு பார்த்த காட்சிகள் அவன் மனதில் ஊறியதன் விளைவே பாலியல் வல்லுறவு முயற்சியும் கொலையும், சிறைவாழ்வும். இவர் பின்னர் மனந்திருந்தி நல்ல மனிதனாக இறந்தார்.

பார்வையின் உளவியல், ஆன்மீகம் என்பனபற்றி இயேசு ஆழமான அறிவு கொண்டிருந்தார். 'ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்கும் எவரும் தம் உள்ளத்தால் ஏற்கனவே அப்பெண்ணோடு விபச்சாரம் செய்தாயிற்றி *(மத் 5:27-28)*. இதே வார்த்தைகளைப் பின்வருமாறும் கூறலாம். 'ஒரு ஆணை இச்சையுடன் நோக்கும் எவரும் தம் உள்ளத்தால் ஏற்கனவே அந்த ஆணோடு விபச்சாரம் செய்தாயிற்று. மேலும் "உங்கள் வலக் கண் உங்களைப் பாவத்தில் விழச் செய்தால் அதைப் பிடுங்கி எறிந்து விடுங்கள். உங்கள் உடல் முழுவதும் நரகத்தில் எறியப்படுவதைவிட உங்கள் உறுப்புகளில் ஒன்றை இழப்பதே நல்லது." *(மத் 5:29)*. இச்சையோடு பார்ப்பது உடலிலுல் உள்ளத்திலும் ஆன்மாவிலும் ஆழமான மாற்றங்களை உருவாக்கு கின்றது. அது நடத்தையில் வெளிப்படுகின்றதோ இல்லையோ அது பாவச் செயலான விபச்சாரத்திற்குச் சமமான பாவம் என்பதே இயேசுவின் கருத்து. அதனால் இயேசு கூறவந்த செய்தி: தூய எண்ணத்தோடு நோக் குங்கள். பார்வையில் அடக்கம் நிறைந்தவர்களாக வாழுங்கள் என்பதேயாகும்.

சினிமாத் திரைகளில் பார்க்கும் காட்சிகள் (காதல் காட்சிகள்), கம்பியூட்டர் திரைகளில் பார்க்கும் ஆபாசக் காட்சிகள், கைத்தெலைபேசித் திரைகளில் பார்க்கும் காட்சிகள், மனத்திரையில் கற்பனையில் உருவாக்கி நோக்கும் ஆபாசக் காட்சிகள், நாவல்களிலும் கதைகளிலும் விபரிக்கப்படும் ஆபாசங்கள், மற்றும் இச்சையோடு கண்களால் நேரடியாகப் பார்ப்பது அனைத்தும் ஒரே விளைவுகளையே கொண்டுள்ளன. உடலிலும் உள்ளத்திலும் ஆன்மாவிலும் ஆழமான பாவப் பதிவுகளை விட்டுச் செல்கின்றன. இதனால் இவ்வாறு பார்த்தவர்கள் சந்தர்ப்பம் கிடைக்கும்போது பகுத்தறிவையும் பாவஉணர்வையும் இழந்து வெறித்தனமாக நடந்து கொள்கின்றனர், சிலர் கொலைகூடச் செய்கின்றனர் அந்த வகையில் இவர்கள் சாத்தானின் விலங்கினால் சிறைப்படுத்தப்படுகின்றார்கள்.

ஆபாசப் படங்களுக்காக ஆபாச நடத்தைகளில் ஈடுபகின்றவர்கள், அவற்றை பதிவாக்கிப் பணம் சம்பாதிப்பவர்கள், ஆபாச இணையத்தளங்களில் இலவசமாக காட்சிகளை வழங்குகின்றவர்கள், இவற்றைப் பிறர் பார்க்க வைத்துப் பணம் சம்பாதிப்பவர்கள், இத்தகைய படங்களைப் பிரதி செய்து இலவசமாகவோ அல்லது பணத்துக்காவோ வழங்குகின்றவர்கள், கைத்தொலை பேசி வழியாகப் பரிமாறுபவர்கள், பிறர் இவற்றை பார்க்கத் தூண்டும்போது உடன்பட்டுச் செயற்படுபவர்கள் அனைவரும் பாவம் செய்கின்றனர்.

இத்தீய பழக்கத்திற்கு உள்ளாகாது காத்துக்கொள்வதே நல்லது. ஏனெனில் இவ்வாறு பார்ப்பது அடிமைப்படுத்தும் தன்மை கொண்டது. இது எப்படி இருக்குமோ என்று அறியும் ஆர்வத்தோடு பார்க்கத் தொடங்க அது அடிமைப்படுத்தும் பழக்கமாகிவிடுகின்றது. போதைப் பொருளுக்கு அடிமையாவது போனறதே ஆபாசக்காட்சிகளுக்கு அடிமையாவதும். இந்தியாவில் ஒரு பொறியியலாளைரை பஸ்சில் சந்தித்தேன். இவர் இளைஞனாக இருந்த போது ஆபாசக் காட்சிகள் கொண்ட சீடிக்கள் வாங்கிப் பார்க்கும் பழக்கத்திற்கு அடிமையாகியிருந்தார். இவர் திருமணமான பின்னரும் கூட இப்பழக்கம் தொடர்ந்தது. மனையுடனான இயற்கையான தாம்பத்திய உறவைவிட இப்படம் பார்ப்பதிலேயே அதிக இன்பம் கண்டார். இப்படம் பார்ப்பதற்காகத் தன் மனைவியை அவரது பெற்றோர் வீட்டிற்குப் போய்வருமாறு நாசூக்காகப் பரிந்துரைப்பார். மனைவி அறிந்திடுவாரோ என்ற அச்சம் இவரைக் குடைந்துகொண்டிருந்தது. இப்பழக்கத்திலிருந்து விடுபடமுடியவில்லையே என்று ஏங்கித் தவித்துக்கொண்டிருந்தார். இப்படிப் பலர் இவ்வாறு காட்சிவழி பாவம் செய்கின்றவர்கள் தாம் பாவம் செய்வது மாத்திரமல்ல இநதப் பாவப் பழக்கத்திற்குள் பிறரையும் பலவந்தப்படுத்தி உட்படுத்தி விடுகின்றனர். குடிகாரர் அப்பழக்கம் இல்லாதவரைக் குடிகாரனாக்கும் முறைபோன்றே இதில் ஈடுபடுவோரும் நடக்கின்றனர். தான் மட்டும் இப்பழக்கத்தில் ஈடுபடுவது இவர்களுக்குக் கடும் அசௌகரியத்தைக் கொடுககின்றது. இதனால் வேறு ஆட்களையும் ஈடுபடுத்தும்போது நான் மட்டுமில்லை வேறு ஆட்களும் இதில் ஈடுபடுகின்றனர் தானே. எனவே பெரிய பிழை இல்லையென்று எண்ணித் தம்மை தாமே ஏமாற்றிக்கொள்கின்றனர். மேலும் சிலர் இன்னொருவரைப் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகம் செய்வதற்கு ஆயத்தப் படுத்தும் தீய நோக்கோடும் இத்தகைய ஆபாசப் படங்களைக் காட்டுவர். இதைச் சிலர் அறியாது அவர்களின் பொறிக்குள் விழுந்து விடுகின்றனர்.

திருமணம் செய்தவர்கள் இவ்வாறான படங்களைப் பார்ப்பது மகிழ்ச்சி தரும் என்ற தவறான சிந்தனையை பாலின்பத்திற்கு அடிமையான மேற்கு நாட்வர்கள் சிலர் பரப்புகின்றனர். இது திருமணமானவர்களுக்கும்கூடப் பாவமான பழக்கமே. இவர்கள் இத்தகைய படங்களில் காண்பது நடிப்பே. ஆனால் இதை உண்மையென நம்பித் தன் கணவன் அல்லது மனைவியும் அவ்வாறே நடந்துகொள்ளவேண்டும் என்று எதிர்பார்த்து ஏமாற்றம் அடைவதால் இவர்களது திருமணவாழ்வு அதிருப்தியில் முடிவடைகின்றது. அது மாத்திரமல்ல மனம் விட்டுப் பேசி வாழ்வைப் பகிர்ந்து மகிழ்வோடு வாழ்வதற்குப் பதிலாக இவர்கள் ஒருவர் மற்றவரை இன்பப் பொருளாகப் பாவிக்க ஆரம்பிக்கின்றனர். இதனால் இவர்கள் தாம் அன்பு செய்யப்படாது போகப் பொருளாகப் பாவிக்கப் படுவதான உணர்வையே பெறுகின்றனர் என்பதை உளவியலாளர்கள் தெட்டத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றனர். எனவே திருமணானவர்கள்கூட இத்தகைய படங்களைப் பார்க்கக் கூடாது. திருமணமாக பெண்ணொருவரைக் கணவன் தன்னோடு சேர்ந்து ஆபாசப் படம் பார்க்குமாறு வற்புறுத்த அவள் ஒரேயடியாக மறுத்து விட்டாள். இவள் ஒரு கத்தோலிக்கப் பெண். இப்படித்தான் பல் பெண்களும் ஆண்களும் நடந்துகொள்ள வேண்டும்.

ஆபாசம் அற்ற ஆனால் தவறான நன்னெறிகொண்ட இந்திய மெகா சீரிஸ் பார்ப்பதை மலேசியாவின் சில பகுதிகளில் தடைசெய்யப்பட்டுள்ளது. அதன் தீமைகளை அங்குள்ளவர்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள். இவற்றைப் பார்பபவர்கள் இத்தகைய வாழ்க்கை முறைதான் தற்போதைய நாகரீகம் என்று எண்ணி சொந்தக் கணவன் அல்லது மனைவியைவிட இன்னொருவருடன் தகாத உறவு கொள்வதுதான் பாசன் என்று நம்பிச் செயற்படத் தொடங்கிவிட்டனர். இவ்வாறு நிகழ்வதாக சமூக ஆர்வலர் பலர் வெளிப்படுத்துகின்றனர்.

பார்வையால் பாவம் செய்யும் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் அருளின் மகிழ்ச்சியையும் விடுதலையையும் அனுபவிக்க வேண்டுமாயின், இயேசுவின் மீட்கும் ஆற்றலை நம்ப வேண்டும். 'என்னை எவராலும் மீட்க முடியாது, ஏன் ஆண்டவராலும் இதிலிருந்து என்னை மீட்க முடியாது் என அடிக்கடி மனதில் தோன்றும் எண்ணம் சாத்தான் விதைக்கும் விதைகள் என்பதை அடையாளம் காணவேண்டும். இத்தகைய பாவப் பழக்கத்திலிருந்து மீட்பதற்காகவும் இயேசு சிலுவையில் தன் இரத்தத்தைச் சிந்தி மரித்தார். என்னையும் மீட்க வல்லவர் என்று உளமார நம்ப வேண்டும். அடுத்ததாக, இதுவரை செய்த இப்பாவத்துக்காக உண்மையாக மனம் வருந்தி ஆண்டவரிடம் வர வேண்டும். இப்பழக்கத்தை உடனடியாக நிறுத்த வேண்டும். இறைவனின் அன்பையும் இரக்கத்தையும் மன்னிப்பையும் நம்பி ஒப்புரவு அருள்சாதனத்தை அடிக்கடி நாடவேண்டும். அதாவது இப்பாவப் பழக்கத்திலிருந்து விடுபடும்வரை நம்பிக்கை தளாரது தவறாது ஒப்புரவு அருட்சாதனம் பெறவேண்டும். திருப்பலியில் இயேசுவின் திருஉடலைத் தகுதியான முறையில் பெற்றுக்கொள்வதன் வழியாக விடுதலை அடைய முடியும். தனித்திருந்து நற்கருணை ஆண்டவரோ உங்கள் இந்த அனுபவத்தைப் பகிர வேண்டும். மனத்தூய்மையோடு வாழ்வதற்கு இயேசு காட்டும் வழிகளை நற்செய்தியில் வாசித்துத் தியானிக்க வேண்டும்.

## உதிரத்தின் உயர்வு



வானில் செலுத்திய செய்மதி கண்டோம்
மானில் பாயும் புலியைக் கண்டோம்
தேனில் குழைந்த மருந்தைக் கண்டோம்
ஞாலத்தில் குருதிக்கு மாற்றீடு கண்டோமா?

எண்கள் போல் நாலுவகை இனங்கள்
கண்கள் போல் உதிரம் கருத்தில் நிறையும்
மண்மேல் வாழும் மாந்தருக்கு வழங்காவிட்டால்
விண்ணோர் கூடு விரைவாகிவிடுமல்லோ

தானங்கள் எட்டாக எழுந்து
தரணியில் உயர்ந்து நிற்குது
தஞ்சம் என்று வருவோருக்கு
தன்னலம் கருதா செந்நீர் சேவை இறையே

தினம் தினம் இரத்தம் வேண்டி
மனம் துடிக்குது பாரு
தானம் ஒன்றே உயிர்காக்கும் என்று
கானம் இசைத்துப் பாரு

அண்ணன் தம்பி உதவிபோல் எங்குமுண்டோ
எண்ணம் கொண்ட தானம்போல் நிகருண்டோ
வண்ணமான உறவுகளை மீட்டெடுக்க
திண்ணமாகக் குருதிக்கொடை செய்வீர்

எள் என்றாலும் ஏழாய்ப்பிரி
என்பதை உணர்ந்து வந்து பணிபுரி
எல்லோரும் மனிதனே
எவர்க்கும் வள்ளல் தேவையே

கணம் செத்துப் பிழைக்கும்
உயிர்களுக்கு
பணம்காட்டி மோசம் பறிக்குதே
குணம் ஒன்று இருந்தால் போதுமென்று
மனமாற செந்நீர் கொதிக்குதே.

ஜெயம் ஜெகன் - புதுக்குடியிருப்பு

# பெற்றோர் மறைக்கல்வி

அருட்சகோதரி யூடினா செல்வநாயகம் (தி. கு. க.)

கிறிஸ்தவ வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் மறைக்கல்வி இன்றியமையாதது. மறைக்கல்விப் பணியானது இறைவாக்குப் பணியாகும். கிறிஸ்துவின் மறையுடலாகிய திருச்சபை இறைவாக்கினராகிய கிறிஸ்துவின் இறைவாக்குப் பணியை நான்கு நிலைகளில் செய்கின்றது.

1. நற்செய்தி அறிவிப்பு
2. இறையியலாக்கம்
3. மறையுண்மைகளை மறையுரை மறறும் போதிகக்கும் முறைகளில் விளக்கிக் கூறுவது
4. மறைக்கல்வி

“பெற்றோர் மறைக்கல்வி” பற்றி நோக்கின் மறையறிவு பெற்றோர்க்கு மிகவும் அவசியமாகின்றது. “குடும்பம் ஒரு குட்டித் திருச்சபை” என்பார்கள். இந்த குட்டித் திருச்சபையில் முதன்மை ஆனவர்கள் பெற்றோர்கள். “பானையில் இருந்தால் தான் அகப்பையில் வரும்” பெற்றோருக்கு மறையறிவு இருந்தால் மட்டுமே பிள்ளைகளுக்கு அது வாய்மொழியாகப் பரிமாறப்படும் அதை கதைகளாகவோ கேள்விக்கான பதில்களாகவோ அமையலாம் பிள்ளைகள் பாடசாலையில் இருக்கும் நேரத்தைவிட வீட்டிலேயே அதிக நேரம் இருக்கின்றார்கள். பெற்றோருடனே அதிக நேரத்தை செலவளிக்கின்றனர். பெற்றோருக்கு மறை பற்றிய அறிவு இருந்தால் மட்டுமே பிள்ளைகள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் கூறக் கூடியதாக இருக்கும்.



மறைக்கல்வி முக்கியத்துவம் வாய்ந்தது எனின் அந்த மறைக்கல்விக்கு மிக முக்கியமானவர் அதன் ஆசிரியர். ஆசிரியரின் தன்மையையும் தரத்தையும் பொறுத்தே மறைக்கல்வியின் வெற்றியும் தோல்வியும் அமையும். ஆழ்ந்த கிறிஸ்தவ அனுபவம், உறுதியான நம்பிக்கை - சமய, சமூக அறிவு, மாணவர்கள் மீதுள்ள உண்மையான அன்பு, மறைக்கல்வி பணியில் ஆர்வமிக்க ஈடுபாடு என்பனஅவரிடம் மேலோங்கி நின்றால்தான் அவரது பணி மிகுந்த பயன்தரும். இல்லையெனின் இது பழுதுற்றதாகவும், பயனற்றதாகவுமே இருக்கும். அந்த வைகயில் குடும்பத்தில் பிள்ளைகளுக்கு மறை ஆசிரியராக இருப்பவர் பெற்றோரே. ஆகவே மேற்குறிப்பிட்ட பண்புகளை கிறிஸ்தவ பெற்றோர்கள் கொண்டிருக்க வேண்டும்.

“இருபது ஆண்டுகள் ஒரு பங்கில் மறைக்கல்வி தரப்படவில்லை என்றால் அங்கு கிறிஸ்தவம் இல்லாமலேயே போய் விடும்” என்றார். புனித ஜான் மரிய வியான்னி இதன் மூலம் மறைக்கல்வியின் தார்ப்பரியம் உணர்த்தப்படுகின்றது.

ஆனால் இன்றைய காலத்தில் சிறு வயதுத் திருமணம், ஒழுங்கீனமான திருமணம் போன்றவற்றினால் தம்பதியினருக்கு மறைக்கல்வி பற்றிய அறிவு அற்றுப் போகின்றது. இதன் காரணமாகவே பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு மறையறிவை கொடுக்க முடிவதில்லை. எனவே அவர்களுடைய சமுதாயம் மறையறிவு இல்லாத சமுதாயமாக மாறிவிடுகின்றது. பாடசாலைகளில் ஆலயங்களில் மறைக்கல்வி பற்றிக் கற்றுக் கொடுத்தாலும் அதற்கான ஆரம்ப அத்திவாரம் பெற்றோரால் பிள்ளைகளுக்கு குடும்பத்தில் இடப்படுகின்றது. ஆகவே பெற்றோருக்கான மறைக்கல்வி மிக மிக அவசியமாகக் காணப்படுகின்றது. மறையின் வழியில் வளர்க்கப்பட்ட பெற்றோரால் மட்டுமே பிள்ளைகளை நேரிய பாதையில் வழிநடத்த முடியும் என்பது ஆணித்தரமான உண்மையாகும். ஆகவே பெற்றோர் மறைக்கல்வி இன்றைய நவநாகரிக உலகத்தில் இன்றியமையாததாக உள்ளது.

(தொடரும்)

# உணர்ந்த போதினிலே!


முனைவர் அ. மரிய தெரசா

இரண்டு வழிப்போக்கர்கள் நெடும் பயணம் மேற்கொண்டிருந்தனர். தங்கள் பொருட்களைச் சுமக்க ஒரு கழுதையையும், தங்களை தூக்கத்திலிருந்து கூவி அழைக்க ஒரு சேவலையும், தங்களுக்கு இருட்டில் ஒளி காட்ட ஒரு தீப்பத்தையும் வைத்திருந்தனர். இருவரில் ஒருவர் பக்திமான், இன்னொருவர் நாத்திகர், பக்திமான் ‘கடவுள் சித்தப்படி எல்லாம் நடக்கும் எனவும், ‘எல்லாம் நன்மைக்கே! கடவுள் பார்த்துக் கொள்வார்’ என்றும் பேசிக்கொள்வார்.

முதல் நாள் பயண முடிவில் இருட்டிவிட்டது. புதிய ஆட்களுக்கு அக்கிராமத்தில் யாரும் இடம் தராததால் அவர்கள் ஊருக்கு வெளியே ஒரு மரத்தடியில் தங்க முடிவு செய்தனர்.

“உன் கடவுள் நம்மை எங்கே தூங்க வைத்திருக்கின்றார் பார்த்தாயா?” என நாத்திகர் கேட்க, மற்றவரோ “இது நல்ல இடம் என கடவுள் தீர்மானித்திருக்கலாம்” என்றார்.

## வீண் விவாதங்கள் ஏன்?



திடீரென தூரமாகக் கட்டப்பட்டிருந்த இவர்களது கழுதை பயங்கரமாகக் கத்தத் தொடங்கியது. இருட்டில் இரை தேடி வந்த சிங்கம் அதை இழுத்துச் சென்றுவிட்டது. பயந்துவிட்ட நாத்திகர் மரத்தில் ஏறி அமர்ந்துகொண்டே “உன் கடவுள் எங்கே?” என்றார். அடுத்தவர் பொறுமையாக “கழுதையைக் கவ்வாவிட்டால் நம்மையல்லவா கடித்துச் சாப்பிட்டிருக்கும்” என்றார். திடீரென சேவல் கத்த ஒரு நரி அதை இழுத்துச் சென்றது.

இரவு அடித்த காற்றில் எரிந்து கொண்டிருந்த தீப்பந்தமும் அணைந்துவிட்டது. எதுவும் பேசமுடியாமல் ‘இன்று மிக அதிகமாக கடவுள் நம்மைக் காப்பாற்றுகிறார் போல’ என முணுமுணுத்தார் நாத்திகர். மறுநாள் பொழுது விடிந்தது. உண்பதற்கு ஏதாவது வாங்கலாம் என கிராமததுககுள் இருவரும் செல்ல, இரவில் ஊருக்குள் புகுந்திருந்த கொள்ளையர்கள் ஊரையே சூறையாடிச் சென்றிருந்தனர். நடந்ததும், அதன் விளைவும் இருவருக்கும் புரிந்தது.

இந்த உண்மையை உள்வாங்கக் கூடிய அளவுக்கு எத்தனையோ கதைகள் சொல்லப்பட்டிருந்தாலும் சின்னச் சின்ன விசயங்களுக்கே விவாதம் செய்யும் மக்களே அதிகம். வாதாடுவதோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. வாய்ப் பேச்சு முற்றிப்போய் அடிதடி சண்டைகளில் இறங்குவோர் உண்டு. இது சாதாரண மக்களுக்கிடையே மட்டுமல்ல, படித்தவர்- படிக்காதவர், ஆண்டி - அரசன், அரசியல்வாதி யாருமே இதற்கு விதிவிலக்கல்ல. இதனால் விவாதங்கள் பேச்சோடு நின்றுவிடாமல் சண்டைகளில் முடிகின்றன. எனவேதான் “ஆற்று வெள்ளம்போல் ஓடிக்கொண்டேயிருங்கள், எப்போதும் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள், சென்று கொண்டேயிருங்கள். இந்தப் பிரபஞ்ச இயக்கம் யாருக்காகவும் நிற்பதில்லை. அப்படி இருக்கும்போது நீங்களும் எதற்காகவும் நிற்காதீர்கள்” என புத்தரும் கூறிச் சென்றார்.

இயற்கையிலிருந்தும் சில உண்மைகளை நாம் கற்றுக் கொள்ளலாம். கோடிககணக்கான பசுமையான இலைகள் ஒரு மரத்தில் காணப்பட்டாலும் எந்த இரண்டு இலைகளும் ஒன்றுபோல் இருக்காதாம், இந்த வேறுபாடுகள் இலைகளுக்குத் தெரியும். எனவே, அவை சண்டையடித்துக் கொள்வதில்லை. இது மனிதனுக்குப் புரிந்தால் எவ்வளவோ பயனுள்ளதாக இருக்கும்! எந்த இரண்டு மனிதர்களும் எதிலும் ஒன்றுபோல் இருக்க மாட்டோம். ஆனால் வம்புக்கு இழுக்காமல் எப்படி சும்மா இருப்பது? இதைப் புரிந்த ஒருவர் மிக அழகாக

“ஆதாமும் ஏவாளும்
மூட்டிய தீ
அணையாமல்
எரிகிறது இன்னும்
காற்று மண்டலம்
இருப் பது வரை
எரியத்தான் செய்யும்”

என குறுங் கவிதையாக எழுதினார். இலைகளில் வேறுபாடு வைத்தவர் மனிதரில் வைக்காமல் இருப்பாரா? கடவுள் தெரியாதவரோ, புரியாதவரோ அல்ல. வேறுபாடுகள் இல்லாமல் படைக்கப்பட்டிருந்தால் மனிதனின் வாழ்க்கை சுவையற்று, சத்தற்றுப் போயிருக்கும். மற்றவர்களை விட சற்று வித்தியாசமானவர்கள்தான் பிறருடைய வாழ்வில் சுவையைக் கூட்டுபவர்களாக இருப்பார்கள்.

ஆரம்ப வகுப்புகளில் பாடம் சொல்லும் ஆசிரியர்கள் குழந்தைகளை உற்சாகமூட்டுவதற்காக அடிக்கடி எழும்பச் சொல்லி உட்கார வைப்பர். இதை திரும்பத் திரும்ப செய்ய வைப்பர். எல்லா குழந்தைகளும் எழும்பி நிற்கும் போது ஒன்றிரண்டு குழந்தைக்ள் மட்டும் உட்காரும். எல்லோரும் உட்காரும் போது இந்தக் குழந்தைகள் நிற்கும். ஏன் என்றும் அவற்றுக்கும் புரியாது. பிறர் சிரித்தாலும் கவலைப் படாது. குழந்தை உளவியல் தெரிந்த ஆசிரியர் என்றால் அக்குழந்தைகளைக் கட்டாயப்படுத்தாமல் அவற்றின் போக்கில் விட்டுவிடுவார். அது அவற்றின் தனித்தன்மை. இது புரியாதவர் அடித்தோ, அதட்டியோ அமர வைப்பார். அவற்றின் தனித்தன்மையை அவை முளையிலேயே இழந்துவிட வாய்ப்பு உண்டு.

வித்தியாசமானவர்களிடம்தான் புதிய கண்டுபிடிப்புகள் உதயமாகின்றன. எல்லோரையும் போல் சிந்தித்திருந்தால் நியூட்டனால் புவி ஈர்ப்பு விசையைக் கண்டறிய முடிந்திருக்காது. நியுட்டனுக்கு முன்னாலும் எததனையோ ஆப்பிள் மரங்களிலிருந்து ஆப்பிள் பழங்கள் கீழே விழத்தான் செய்தன. ஆப்பிள் மரங்களைப் பார்த்தவர்கள் அனைவரும் இதையும் பார்த்திருபபார்கள். அவர்களுக்குத் தோன்றவில்லையே! ஐசக் நியூட்டனிடம் மட்டுமல்ல, மானிடராய் பிறந்த ஒவ்வொருவரிடமும் தனித்தன்மைகள் உண்டு. நினைத்துப் பார்க்க பொறுமையில்லாததாலும், சோம்பேறிகளாகவும், தேவையற்ற சிந்தனைகளால் மனதை நிரப்பியிருப்பதாலும் தங்களது தனித்தன்மையையும், முக்கியத்துவத்தையும் மக்கள் உணர்வதில்லை.

இலக்கியத்துக்கு நோபல் பரிசு பெற்ற வங்காள கவிஞர் இரவீந்திரநாத் தாகூரை நம் அனைவருக்கும் தெரியும் தாகூரின் வீட்டில் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகம். விழாக்கள், பண்டிகைகள், பிறந்த நாட்கள் வரும் போது அனைவரையும் ஒன்று கூட்டுவது சிரமம் என்பதால் அவர்கள் வீட்டில் வித்தியாசமான ஓர் ஏற்பாடு செய்வது வழக்கம். வீட்டின் சாமியறையில் ஒவ்வொருவருக்கும் ஒரு நோட்டுப் புத்தகம் வைத்திருப்பார்களாம். குறிப்பிட்ட நபருக்கு பெரியவர்கள் சொல்ல வேண்டிய வாழ்த்தையோ, புத்திமதிகளையோ அந்த நோட்டில் எழுதி வைப்பார்கள். தாகூர் அவரது உடன்பிறந்தாரைப் போல இல்லாமல் எல்லாவற்றிலும் வித்தியாசமாக இருப்பாராம். அவரது பாட்டி அவருக்கு எழுதிய பிறந்த நாள் வாழ்த்தில் ‘ரவியைப் பற்றி கவலையாக இருக்கிறது. அவன் மற்றவர்களைப் போல் இல்லாமல் வித்தியாசமாக இருக்கின்றான். எப்படி வாழப் போகிறானோ தெரியவில்லை’ என எழுதியிருந்தாராம். இந்தத் தனித் தன்மைதான் அவரை உலகம் போற்றும் கவிஞனாக மாறியது. இத அன்று அந்தப் பாட்டிக்குத் தெரிந்திருக்கவில்லை.

துணிக்கடைகளுக்குச் செல்கிறோம். பல வண்ணங்களில், பல டிசைன்களில், பல ரகங்களில் எத்தனையோ துணிமணிகளைப் பார்க்கின்றோம். சிலர் சில துணி ரகங்களைப் பாத்து ‘யாராவது சும்மா இனாமாக வாங்கித் தந்தால் கூட எனக்கு இது வேண்டாம்’ எனறு வெளிப்படையாகவே தங்களது வெறுப்பை வெளிப்படுத்துவார்கள். ஆனால் அதையும் விரும்பித் தேர்வு செய்யும் மக்கள் நம்மிடையே உண்டு. எனவேதான் அவையும் உற்பத்தி ஆகின்றன. விற்பனையும் ஆகின்றன.

ஒருவருக்குப் பிடிக்காதது இன்னொருவருக்குப் பிடிக்கிறது. ஒருவருக்குப் பயன்படாதது மற்றொருவருக்குப் பயன்படுகிறது.

எனவேதான் பயனற்றவர் என எவருமோ, பயன்பாடு இல்லாதது என எதுவுமோ இவ்வுலகில் இல்லை. கடவுளது பார்வையும், அவரது விருப்பமும், அவரது திட்டமும் மனிதனுடையது போன்றவை அன்று. இதைப் புரிந்து கொண்டால் வீண் விவாதங்கள் எதற்காக?

ஆத்திகனைப் படைத்ததும், நாத்திகனைப் பராமரிப்பவரும், எண்ணங்களைக் கொடுத்ததும், வண்ணங்களை உண்டாக்கினவனும், மண்ணை உருவாக்கியவரும், விண்ணை அமைத்தவரும், உன்னைப் படைத்தவனும், என்னைப் படைத்தவனும் - வேறு யாருமல்ல, ஒரே பரம்பொருள்தான், உன்னைப் படைத்

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

# கவிதைச் சரம்

## பெற்றோரை பேண்

எல்லாம் படைத்தளிக்கும் ஏகன் இறைவனவன்
எல்லாவற்றிலும் மேல் இனிதனித்தான் – நல்லாய்
இருவரை நின் பெற்றோரை இவ்வருவர்ப்பேணிப்
பெறுவாய் நீவீடென்னும் பேறு

உன்னைச் சுமந்தவளை உண்ணமுலை தந்தவளை
அன்னமமு தாக்கியளித்தவளைக் கனைத்தே
வைத்திதழையன் பால் மகிழ்ந்தவளை நீதி வைப்பாய்
இத்தரைமீது துள்ளவுமே

இல்லா திருந்தவுனை ஈன்றெத்துக் காணிமிர்ந்து
நில்லாத நின்னை நினைந்தெடுத்துச் – சொல்லாத
வாய்க்குப் புரிந்துணைவு வைத்து வளர்ந்தவளாம்
தாய்க்கு நிகர் தயைவளே தான்

பியோ
குருநகர்

## விதவை

கண்ணீரைப் புசித்து
கானலை இரசித்து
வெண்மையை அணைத்து
விதியோடு போராடுபவள் விதவை

பகலதை வெறுத்து
பன்மையை ஒறுத்து
இரவினைத் துரத்தி
இன்பத்தை விலக்கி
சமூகச் சாக்கடையால்
சாட்டையடி வாங்குபவள் விதவை

மங்கலம் தவிர்த்து
மனதினை அடக்கி
உணர்வினை நறுக்கி
உயிர்வலி பொறுத்து
கனவுப் பூக்களை – தன்
குழலிலே அணிபவள் விதவை

கண்டவர் தின்றோர்
கிளப்பிடும் வதந்தி
சுற்றங்கள் சூழ்ந்து
சுமத்திடும் பழிகள்
நெஞ்சினில் தைக்க
இடிந்துளம் துடிப்பவள் விதவை

ற.றமில்டன்
ஊர்காவற்றுறை

அருட்பணி பி.பி.பிலிப் அ.ம.தி அடிகளாரின்
50வது குருத்துவ பொன்விழா வாழ்த்து

## இறை உணர்வோன் வாழ்க!

பாராண்ட மன்னர் சிலர் தரித்த பெயர் பிலிப்பு
பரிஅன்பன் என்ற பொருள் பிலிப்பின் மொழிபெயர்ப்பு
தாராள தவத்தோர்க்கு பொருந்தும் அரச பரிவு
தங்கமான அருட்தந்தை பிலிப்புக்கும் விரிவு.

பெத்சைடா ஊர் பிறந்த இயேசு அடியான்
பெருங்குணத்தோன் குரு அழைப்பை பெருமையுடன் ஏற்றார்
பக்திவளர் பாசெய்யூர் மலர்ந்த நம் பிலிப்பு
பரம்பொருட்காய் துறவறத்துள் புகுந்த தென்னவியப்பு.

ஆயிரமாம் மக்களது அரும்பசியைப் போக்க
அன்னமெங்கே என்று இயேசு பிலிப்பிடமே கேட்டார்
பாயிரங்கள் கூறும் அந்த அற்புதத்தை இன்றும்
பாங்குடனே விருந்தளிக்கும் பணியாள் நம்பிலிப்பு.

இறைமகனோடுரையாட உறுதுணையை வேண்டி
மறையறியாக் கிரேக்கர் சிலர் பிலிப்பை நாடி வந்தார்
நிறைவாழ்வை நிதம் ஈசன் திருவழியில் பெறவே
நீடுழைத்து வழிகாட்டும் நிதியோன் நம் பிலிப்பு

தந்தையை நாம் பார்ப்பதற்கு வழிசெய்யும் என்று
விந்தையினைப் புரியாது பிலிப்பு அன்று கேட்டார்
அப்பன் அருள் பெற்றதால் நற் பணிவாழ்வில் நிலைத்தே
ஒப்பிலா இறை முகத்தைக் காட்டுவார் நம் பிலிப்

புன்னகையின் மன்னன் அவர்
புண்படுத்தா குணநலத்தோன்
இன்சொல்லின் செல்வன் அருள்
பொழி மொழியின் ஆசான்
வன் முறைகள் மலிந்த மண்ணுக்
அருமருந்து போலவெம்
இன்னல்களில் பங்குபெறும்
இறையுணர்வோன் வாழ்க!

– நீ. மரியசேவியர் அடிகள் –

## மறைக்கல்வி ஏன் அவசியம் ?

✪ கடவுளின் பிள்ளையென அழைக்கப்பட உண்மையில், அன்பில், கடமையில், தியாகத்தில் வாழ நீரினாலும், தூய ஆவியினாலும் மறுபிறப்பு அடைந்த ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் மறைக்கல்வி அவசியம் வேண்டும்.

✪ திருமுழுக்கு பெற்ற ஒவ்வொருவனும் ஈடேற்ற மறைபொருளின் அறிவைப்பெற விசுவாசம் எனும் கொடையைநாளுக்கு நாள் மென்மேலும் உணர மறைக்கல்வி அவசியம் வேண்டும்

✪ இறை தந்தைக்கு விசேஷமாக இறைவழிபாடு செய்ய ஞானத்திலும், உண்மையிலும் ஆராதனை செய்ய கற்றுக்கொள்ள புதுமனிதனின் பூரண நிலைக்கிணங்க நேர்மையிலும், புனிதத்திலும் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையை சீர்படுத்திக்கொள்ள மறைக்கல்வி அவசியம் வேண்டும்.

✪ அப்போஸ்தலப்பணி வாழ்க்கையில் நாமும் படிப்படியாக முன்னேற கிறிஸ்தவமல்லாத பற்பல மதங்களைப் பின்பற்றுபவர்களோடு கூடி வாழும் எமக்கு மறைக்கல்வி அவசியம் வேண்டும்.

✪ கஸ்டங்கள், துன்பங்கள், துரோகங்கள், நன்றியில்லாத் தன்மை போன்றவற்றால் வேதனை அடைந்து மனக்கலக்கமடைபவர்களுக்கு மனிதனின் விசுவாசத்திற்கு உயிரும், உணர்ச்சியும் செயலாற்றும் சக்தியும் அளிப்பதற்கு மறைக்கல்வி அவசியம் வேண்டும்.

✪ கத்தோலிக்க பாடசாலைகள், அரசாங்க மயமாக்கப்பட்டதினாலும் கத்தோலிக்கமல்லாத பாடசாலைகளிலும், பிறமத சூழலிலும் சிதறுண்டு வாழும் நம் பிள்ளைகள் அனைவரும். இறைவனின் உண்மையான முழு அன்பை அறிய, சுவைக்க மறைக்கல்வி அவசியம் வேண்டும்.

✪ மனித சமுதாயத்திலும், திருச்சபையிலும் தாங்கள் ஓர் உறுப்பினர்கள் என பிள்ளைகள் அறியதங்கள் ஆன்மீக வாழ்வை உருவாக்க எல்லா இன, மத, மொழி மக்களுடனும் அன்பினைக் கோர்க்க அவசியம் மறைக்கல்வி வேண்டும்.

✪ யேசுக்கிறிஸ்துவின் உண்மை, மகிழ்ச்சி, சுதந்திரம், ஆற்றல் ஆகிய நற்பண்புகளை இதயத்தில் வளர்க்க கிறிஸ்துவை நன்கறிந்து அவருடன் நெருங்கிய ஒன்றிப்பை ஏற்படுத்தி மகிழ்வுடன் வாழ மறைக்கல்வி அவசியம் வேண்டும்.

✪ கிறிஸ்துவின் செய்தி விடுதலை அளிப்பது நம்பிக்கையூட்டுவது, அன்பை வளர்ப்பது, பூரணத்துவத்தை அளிப்பது என்பன போன்ற பண்புகளை வெளிப்படையாக உணர வைப்பதற்கு மறைக்கல்வி அவசியம் வேண்டும்.



திருமதி M.A. றாஜினி
தோணிக்கல், வவுனியா

✪ திருச்சபையின் பணியை விருத்தி செய்ய அறியாமையை நீக்கி சமய அறிவை பெருக்கிக கொள்ள சமயச் சார்பான பொறுப்பை உண்மையாக விளங்கிக் கொள்ள சமூக சேவையில் உண்மையான கிறிஸ்தவ பொறுப்புணர்ச்சியுடன் ஈடுபட மறைக்கல்வி அவசியம் வேண்டும்.

## உணர்ந்த....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தவனும், என்னைப் படைத்தவனும் - வேறு யாருமல்ல, ஒரே பரம்பொருள்தான். வித்தியசாமானவர்கள் வித்தியாசமாகவே இருக்கட்டும். விவாதிப்பதால், சண்டையிடுவதால் எதையும் புதிதாக நாம் சாதிக்கப் போவதில்லை. நமது நற்பெயரை இழப்பதைத் தவிர, ஏனெனில், கெட்டிக்காரன் பேசுகிறான், முட்டாள் விவாதம் செய்கிறான், அறிஞன் அமைதியாகவிருக்கிறான் என்பவை சான்றோர்களின் அனுபவ வார்த்தைகள்.

இவர்களில் நாம் யார்?

## பொன்னென ஒளிரும் தெய்வ தரிசனம்!

திருக்குடும்ப கன்னியர் சபை
தீன் சுவையாய் இறை பணியை
திக்கெட்டும் பொழிந்து திற்க
திடம் உயர் பணி செய்யும்
திரவிய அருட்சகோதரியே!
அருள் நிறைந்த அன்னையே
“அம்மா” என்ற அமுத மொழியின்
அர்த்தத்தை அகராதிகளில் அல்ல
அன்புள்ள உங்கள் பணிகளில்
அரவணைக்கும் உங்கள் கரங்களில்
அளித்திடும் உபசாரங்களில்
அர்ப்பணிப்புச் சேவைகளில்
அலாதியாய் கண்ணுற்றோம்
துறவற வாழ்வின் ஐம்பது அகவை
தூய நற்பணிகள் பல புரியும்
தூய வெண் லில்லி மலரே .
வாழ்வே பொன்னாக ஒளிரும் உங்களுக்கு
இன்றல்ல என்றென்றும்
இறையருள் பொங்கிட
இனிய என் ஆசீர் வாழ்த்துக்கள்

## சிந்திக்க ஓர் சித்திரம்




ச. சுலோச்சனா

# பங்கு புதுப்பித்தலில் அன்பியங்கள்

## - ஓர் அனுபவம் -

"இன்று எம் பங்குத் திருச்சபையில் அன்பியங்கள் மிக அவசியமானது". அந்த வகையில் "அன்பியங்கள்" என்ற சொல் இன்று பரவலாக திருச்சபை மட்டங்களில் அறியப்பட்டும், பேசப்பட்டும் வருகிறது. ஆயினும் இச்சொல் குறித்து நிற்கும் சிறு சிறு குழுமங்களில் கிறிஸ்தவ அழைப்பை வாழ முயலுதல் என்ற எண்ணக்கரு திருச்சபையில் மிக முக்கியமானது. இன்று பெரும்பாலான கிறிஸ்தவர்கள் நாளாந்த உலக வாழ்வின் சவால்கள் மத்தியில் கிறிஸ்தவத்தை வாழ வேண்டி இருப்பதே யதார்த்தமாக உள்ளதால் அன்பியங்கள் எனப்படும் அயலவர் திருச்சபை எமது கிறிஸ்தவ வாழ்வை ஆழமாக்க பெரும் துணைபுரியும்.

### அன்பிய உருவாக்கம் (05-02-2009)

"கிறிஸ்துவின் அன்பில் நிலைத்து வாழுங்கள்" என்ற வார்த்தையில் ஆழம் பெற. புங்குடுதீவு என்னும் கிராமததில் அமைந்துள்ள எமது பாதுகாவலரான புனித பிரான்சீஸ்கு சவேரியார் ஆலய பங்குத் திருச்சபையில் ஆண்டவன் இயேசுவின் பேரில் அன்பியங்களை உருவாக்க வேண்டும். அன்பிலே எம் பங்குமக்களை வளர்க்க வேண்டும். என்ற ஆசையோடு அன்பியங்கள் என்ற "இலக்கு" கொண்டு எமது பங்குத்தந்தையால் அத்திவாரம் இடப்பட்டது.

அன்பியங்கள் என்ற இலக்கை அடைவதற்கு இயேசு கிறிஸ்து கூறியதைப் போன்று "கொடி செடியோடு இணைந்திருந்தால் அன்றி கனிதர இயலாது. *(யோ 15:4)* என்ற வார்த்தைப்பகுதியோடு எமது பங்குத்தந்தை பங்கு மக்களோடு இணைந்து அன்பியத்தை ஒன்றுகூட்ட அருட்தந்தை இரவிச்சந்திரன் அடிகளாரின் துணையோடு அவருடைய பங்காக இருந்த யாழ் நாவாந்துறைக்கு இயேசு 72 சீடர்களை நற்செய்தி பணிக்கு அனுபபியதைப் போன்று *(லூக் 10:01)* எம் பங்குத்தந்தையும் எமது பங்கு மக்கள் 70 பேரை நியமித்து தானும் எம்மோடு வருகை தந்திருந்தார். அங்கு அருட்தந்தையர்கள் இருவரும் மாபெரும் தூண்களாக நின்று எம்மை அன்போடு வரவேற்றார்கள். பின்னர் தம் பங்கிலுள்ள அன்பிய ஊக்குவிப்பாளர்களோடு எம்மையும் இணைத்து குழுக்களாக பிரிந்து அங்குள்ள ஒவ்வொரு வலயங்களையும் தரிசிப்பதற்கும் அங்கு அன்பிய வழிபாட்டை செய்வதற்கும் நாங்கள் அனுப்பப்பட்டிருந்தோம். அங்கு மிகவும் சிறப்பான முறையில் அவர்கள் எம்மை வரவேற்று ஒவ்வொரு வீடாக தரிசித்து அவர்களோடு நல்ல அன்புறவை வளர்த்து கொள்ளவும் அவர்கள் கொடுதத உணவை பகிர்ந்து உண்ணவும் எமக்கு மிகவும் நல்ல வாய்ப்புக் கிடைத்தது. பின்பு அயலவர்கள் கூடி வந்து அன்பிய பகிர்வினை ஒழுஙகுபடுத்தி எம்மையும் அதில் இணைத்து அன்பிய வழிபாட்டினை அர்த்தமுள்ள முறையில் செய்து காண்பிக்கப்பட்டதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்து அருட்தந்தை இரவிச்சந்திரன் அவர்களின் ஆசீருடனும் அந்த பங்கு மக்களின் அன்புடனும் விடைபெற்று வந்தோம்.

எனவே எமது அன்பியம் "புத்துயிர்" பெற வழி காட்டிய இடம் யாழ் நாவாந்துறை பங்கு என்றால் மிகையாகாது. இவர்கள் மூலமே அன்பியம் எம் பங்கில் பிறக்க வழிகோலியது.

### எம் பங்கில் அன்பியம்....

எமது பங்கிலே ஏழு அன்பிய வலயங்களாகப் பிரிக்கப்பட்டு அன்பியங்கள் நாவாந்துறைப் பங்கில் எவ்வாறு நடைபெற்றதோ அதேபோன்று எமது பங்கிலும் மிகவும் சிறப்பான முறையில் வழிபாடுகள், திருப்பலிகள், இன்னும் தபக்கால வழிபாடுகள் போன்ற செயற்பாடுகளை நடத்தி வருகின்றோம். விசேடவிதமாக இந்த ஏழு வலயங்களுக்கும் அதாவது 1ம் வலயம் "ஆவேமரியா" என்ற பெயரிலும், 2ம் வலயம் "புனித பவுஸ்ரீனா" என்ற பெயரிலும். 3ம் வலயம் "திருக்குடும்பம்" என்ற பெயரிலும், 4ம் வலயம் "இறை இரக்கம்" என்ற பெயரிலும், 5ம் வலயம் "அன்னை திரேசா" என்ற பெயரிலும், 6ம் வலயம் "புனித யோசவாஸ்" என்ற பெயரிலும், 7ம் வலயம் "புனித செபஸ்தீயார்" என்ற பெயரிலும் அழைக்கப்பட்டு அவ்வாலயங்களுக்கு ஏற்ற கொடிகளும் கொடுக்கப்பட்டிருகிறது. அத்தோடு ஒவ்வொரு கிழமைகளிலும் வலயங்களில் அன்பியப் பகிர்வு இடம் பெற்றும் வருகிறது.

### எம் பாதுகாவலின் திருவிழா..

எமது பாதுகாவலரான புனித பிரான்சிஸ்கு சவேரியாரின் திருவிழா ஏழு அன்பிய வலயங்களையும் மையப்படுத்தியே அமைந்திருக்கும். திருவிழா ஆரம்பித்து கொடியேற்ற நாள் அன்று ஏழு வலய கொடிகளும் அன்பியப்பாடல் பாடப்பட ஏழு வலயத் தலைவர்களாலும் ஏற்றப்பட்டு மிகவும் பிரசித்தமான முறையில் நவநாள் வழிபாடுகள் அனைத்தும் ஒவ்வொரு வலயங்களிடமும் ஒப்படைக்கப்பட்டு இருப்பதால் வெவ்வேறு விதமான அர்த்தமுள்ள வழிபாடுகள் பல கோணங்களில் மிக சிறப்பாக திட்டமிடப்பட்டு, நடைமுறைப் படுத்தப்பட்டு வரும். இந்த பணிகளை அன்பிய வலயங்களிடம் ஒப்படைத்ததால் கொடியேற்றம் தொடங்கி சுற்றுப்பிரகாரம் வரை எந்த பிரச்சனைகளோ, இடர்பாடுகள் எதுவுமின்றி ஒவ்வொரு பணிகளையும் எல்லோரும் இணைந்து செயற்படுத்தினோம்.

மேலும் இந்த ஆண்டு இடம்பெற்ற திருவிழாவில் இறுதி இரவுப் பொழுதில் அருட்தந்தை இரவிச்சந்திரன் அடிகளாரின் தலைமையில் "விடியல்" இசைக் குழுவினர் வருகைதந்து மேலும் திருவிழாவை சிறப்பிக்க மக்களை மகிழ்ச்சிப்படுத்த உதவியாக அமைந்திருந்தது.

### எம்ஆலய கட்டுமான பணிகள்.

எமது ஆலய கட்டுமான பணியை முன்னெடுப்பதற்கு எமது அன்பிய வலயங்களே காரணமாக அமைந்தது. எடுத்துக்காட்டாக ஆலயத்தை உடைப்பதிலிருந்து அதற்கான சிரமதானப் பணிகள், நிதி உதவிகள், என்பவற்றை கொடுத்து எமது பங்குத்தந்தையுடன் இணைந்து ஒவ்வொரு வலயத்திலுமுள்ள மக்கள் அனைவரும் ஒன்று கூடியே ஆலய முகப்பு பகுதியை எமது பங்கு மக்களின் சரீர உதவிகள், நிதி உதவிகள், வெளிநாட்டு மக்களின் உதவிகளோடே ஆலய முகப்புப் பகுதியை மிகவும் பிரமாண்டமான முறையில் அழகுறக் கட்டி அமைத்திருக்கின்றோம். தொடர்ந்து ஆலய பிற்பகுதியையும் இப்போது பங்குத்தந்தையும் பங்குமக்களும் இரவு பகல் பாராது கட்டிவருகின்றோம். அத்தோடு அழகிய பங்குமனையும் அமைத்துவருகின்றோம். இந்த கட்டுமானப்பணிகள் விரைவாக இன்றும் நடந்து கொண்டிருக்க அன்பியங்களே துணையாக உள்ளது.

### அன்பிய வலயங்களில் திருச்சொரூபங்கள்..

எமது அன்பிய வலயங்கள் ஒவ்வொன்றிலும் "அன்னை வேளாங்கன்னி சொரூபம்", "குழந்தை இயேசு சொரூபம்", "திருக்குடும்ப சொரூபம்", அத்தோடு கடற்கரையோரத்தில் "புனித சூசையப்பர் சொரூபம்", என்பவற்றோடு 7ம் அன்பிய வலயத்தில் "புனித செபஸ்தியார் சிற்றாலயம் கட்டி முடித்திருக்கின்றோம். இன்னும் சிறப்பாக "புனித யோசவாஸ் அடிகளாரின் சொரூபம் கட்டுவதற்கான அத்திவாரம் இடப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவும் எம் பங்கில் உள்ள அன்பிய மக்களினாலே முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது.

### அன்பியங்கள் ஊடாக பாத யாத்திரை..

எமது அன்பிய வலயமக்களாகிய நாங்கள் சாட்டி சிந்தாத்திரை அன்னை ஆலயத்திற்கு பாதை யாத்திரையாக அன்னைமரியாளை எடுத்துச் சென்றோம். அதேபோல் சாட்டி யாததிரைஸ்தலத்திற்கு சிலுவைகளை அனைவரும் தாங்கியவாறு சிலுவை பாத யாத்திரையும் அத்தோடு மன்னார் மரியன்னை ஆலயத்திற்கும் யாத்திரையாக சென்றிருந்தோம். இவைகள் அனைத்தும் நல்ல முறையில் நடந்து முடிவதற்கு பங்குத்தந்தையின் முயற்சியும் அன்பிய மக்களின் போதிய ஒத்துழைப்புமே காரணமாக அமைந்திருந்தது.

### அன்பிய வலயங்களை தரிசித்தலும் புதுப்பித்தலும்..

மேலும் சிறப்பாக எமது பங்குத்தந்தையின் உதவியோடு பங்கை தரிசித்து மக்களை நல்வழிபடுத்தவும் அன்பியங்களை மேலும் வளர்ச்சியடைய செய்வதற்கு அருட்தந்தை இரவிச்சந்திரன் அடிகளார் உட்பட பல அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் யாழ் மறைமாவட்ட அன்பிய ஊக்குவிப்பாளர்கள் என்போர் வருகைதந்து அன்பியங்களை பார்வையிட்டு அன்பியங்களில் உள்ள குறைபாடுகளைக் கண்டு நிவர்த்தி செய்து அன்பியங்கள் புதுப்பித்துச் சென்றிருக்கின்றார்கள். இதனால் எமது அன்பியங்கள் மேலும் வளர்ச்சியடைய பெரும் துணையாக அமைந்து கொண்டன.



S. டயானா
தூய சவேரியார் ஆலயம்
புங்குடுதீவு.

### அன்பிய வலயங்களுக்கிடையேயான போட்டிகள்..

இன்னும் சிறப்பாக உயிர்ததுடிப்புள்ள அன்பியங்களாக வளர்ந்து கொண்டு வருவதற்காக இந்த ஆணடு வைகாசி மாதம் எமது பாதுகாவலரின் திருவிழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட பாரம்பரிய விளையாட்டு போட்டிகள் மாணவர்களுக்கான பரீட்சைப் போட்டிகள், திறந்த கவிதை கட்டுரை, பேச்சு, சித்திரப்போட்டிகள் என்பனவற்றோடு "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற தலைப்பில் வலயங்களுக்கிடையேயான நாடகப்போட்டியும் இடம பெற்றது. இதற்கான பரிசில்களாக வெற்றிக் கிண்ணங்களும், பணப் பரிசில்களும், மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும், வளங்கப்பட்டன. இந்தப் போட்டிகளில் அனைத்து வலயங்களும் பங்குபற்றி வெற்றி தோல்விகளை சமமாக மதித்துக் கொண்டார்கள். இந்த உண்மை நிகழ்வுகள் வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்வாக தடம் பதித்துள்ளன.

### அன்பியம் ஆரம்பிக்கப்பட்ட அன்றைய, இன்றைய நிலைகள்

எமது பஙகுத்திருச்சபையில் ஆரம்பிக்கபபட்ட அந்த நிலையிலே நாவாந்துறைப் பங்கில் எமக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்ட அன்பிய வழிபாடு, பகிர்வோடு மட்டும் நின்று விடவில்லை மாறாக மேற்கூறப்பட்ட பல செயற்பாடுகளோடு இன்னும் பல விடயங்களை ஒவ்வொரு மாதத்திற்கும் ஏற்ப திட்டமிட்டு ஒழுங்கமைத்து நடைமுறைப்படுத்த எண்ணியிருக்கின்றோம். இவைகள் அனைத்தும் எம் கைகூட அன்பியத்தை கட்டி பாதுகாத்து நடைமுறைப்படுத்தி வருகின்றோம். இவையனைத்தும் அன்பியம் உருவாக்கப்பட்ட அந்தக்கனமே உருவான இறை அன்பும், வல்லமையும் என்றுதான் எண்ணி செயற்படுகின்றோம். எனவே நாம் எமது அன்பிய செயறபாடுகளில் முன்னேற்றம் காணும் இந்த நிலையில், யாழ்மறை மாவட்டம் முழுவதிலும் இவ்வாறாக அன்பிய செயற்பாடுகள் வீழ்ச்சி காணாமல் எழுச்சி காண வேண்டும் என்பதே எமது உள்ளார்ந்த நோக்கு. எனவே வாருங்கள் எம் அன்பியத்தை பாருங்கள் பயன் பெறுங்கள் இதனை பயன் படுத்துங்கள்.

---

## டீசல் புகையைச் சுவாசிப்பதால், நுரையீரல் புற்றுநோய் உண்டாகும் - WHO -

டீசல் இயந்திரங்களும் வாகனங்களும் வெளிவிடும் புகையைச் சுவாசிப்பதால், நுரையீரல் புற்றுநோய் உண்டாகும் என்று WHO உலக நலவாழ்வு நிறுவனம் கூறியுள்ளது.

சுரங்கத் தொழிலாளிகள், இரயில் துறைப் பணியாளர்கள், வாகன ஓட்டுனர்கள் மத்தியில் மேற்கொண்ட ஓர் ஆய்வின் முடிவில் WHO இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

டீசல் புகையில் உள்ள carcinogens என்ற வேதிப் பொருள் புற்று நோயை உண்டாக்கும் சக்திபெற்றது என்று இந்த அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. உலகெங்கும் டீசல் புகைக்கு, மக்கள் பெரும்பாலான நேரங்கள் உள்ளாக்கபபடுவதால், இந்த ஆபத்தைத் தவிர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இந்த ஆயவுக் குழுவின் தலைவராகப் பணி புரிந்த கிறிஸ்தோப்பர் கூறினார்.

உலக நலவாழ்வு நிறுவனத்தின் இந்த ஆய்வறிக்கையை கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்போவதாக பிரித்தானிய நலத்துறை அறிவித்துள்ளது.

டீசல் புகையால் நுரையீரல் புற்று நோய் உருவாகும் ஆபத்து உள்ளது என்றாலும், புகை பிடிப்பதால் நுரையீரல் புற்று நோய் உருவாகும் ஆபத்து இன்னும் பல மடங்கு அதிகம் என்று புற்றுநோய் மருத்துவர் லெஸ்லி வோக்கர் எச்சரிக்கை விடுத்தார்.

---

## நன்றி

திருச்சிலுவை கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி ஜெயா பயஸ் ஆகிய நான், கொழும்பு அரசினர் வைத்தியசாலையில் பெரிய சத்திர சிகிச்சைக்குள்ளாகி கடுமையான வருத்தத்தோடு இருந்தபோது, இதை அறிந்து, எனது சுகத்திற்காக மன்றாடிய குருக்களுக்கும், எல்லாத் துறவற சபைத் துறவியர்களுக்கும், அன்பு உள்ளம் கொண்ட அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கடவுளின் இரக்கத்தாலும் உங்களின் உருக்கமான செபத்தாலும கடவுள் எனக்கு மீண்டும் வாழ்வு தந்துள்ளார், அவருக்காகப் பணிபுரிய.

"வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார்" லூக்: 1:49.

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவிக்கும் மகிமை உண்டாவதாக.

அருட்சகோ. ஜெயா பயஸ்
திருச்சிலுவை கன்னியர் சபை

# மாற்றங்கள் வேண்டி நிற்கும் மறவன்புலோ மக்கள்

பா. அனோஜா - யாழ். பல்கலைக்கழகம்



வெள்ளை நிறச் சட்டையுடன் 500மீற்றர் தொலைவிலிருந்து நன்னீரைப் பெறுவதற்காக செல்லடியில் தந்தையை இழந்த மா. சர்மிலா தண்ணீரை வாங்கிக் குடித்து விட்டு பாடசாலைக்குச் சென்றாள். அவளுடன் அவளின் தோழியான தந்தையை இழந்த பா.விதுஷாவும் சென்று கொண்டிருந்தார்கள். இருவருள் விதுஷா "பெரும்பாலானவர்கள் அப்பம், றொட்டி, தோசை, வடை, றோல், பனியாரம் சுட்டுத்தான் தமது சீவியத்தை ஓட்டுவார்கள். ஆனால் எங்கட அம்மா சிரட்டையைச் சுட்டு கரியாக்கி அவற்றை விற்று எங்களைப் பார்க்கிறா?" என்று தனது உள்ளத்துக் குமுறலை தனது தோழியிடம் பகிர்ந்து கொண்டாள். இவ்வார்த்தைகளைக் கேட்ட என் பேனா சில நிமிடங்கள் இடியோசை கேட்ட நாகம் போல் ஆனது. இப்படி இவர்கள் போக ஒன்றல்ல இரண்டல்ல இக்கிராமத்தில் பல பிள்ளைகள்.

மறவன் எனறால் வீரம், புலோ என்றால் நிலம் அல்லது வளவு என்று அர்த்தம். வீரர்கள் பலர் இருந்த நிலமான மறவன் புலோ யாழ்ப்பாணத்திலிருந்து 17 கிலோமீற்றர் தொலைவில் அமைந்திருக்கின்றது. இது தென்மராட்சி சாகவக்கச்சேரி பிரதேச செயலகத்திற்குள் அமைந்த ஓர் கிராமமாகும். 1999ஆம் ஆண்டு இக்கிராமம் ஒரிரண்டு கல்வீடுகளோடும், ஏனையவை மண் வீடுகளோடும் காட்சி தந்த இந்தக் கிராமத்தின் மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் 30 வீத மாணவர்கள் மீன்பிடித்தொழிலையும் மேற்கொண்டு வருகின்றார்கள்.

இக் கிராமத்தின் சிறப்பு என்னவென்றால் கடலும் கடல் சார்ந்த இடமான நெய்தலும் வயலும் வயல் சார்ந்த இடமுமான மருதமும் ஒருங்கிணையப் பெற்ற நிலமே மறவன்புலோ, இக் கிராமத்தின் நிலையினை அறிய தோளிலே 25லீற்றர் தண்ணீர்க் கானைச் சுமந்த படி வந்த ம.கலைவாணியிடம் (வயது -35) கேட்ட போது இங்குள்ள மக்களாகிய நாம் மிகவும் கஸ்ரப்படுவது குடிநீரினாலேயே. ஆங்காங்கே ஒரு சில இடத்தில் தான் நல்ல தண்ணீர்க் கிணறுகள் இருக்கின்றன. இதனால் 500m என்றும் 600m என்றும் பாராமல் நல்ல தண்ணீருககு வரவேண்டியிருக்கும். விவசாயத்தை நம்பியுள்ளவர்கள் நீரைப் பெறுவதில் அவஸ்தை கொள்கிறார்கள். ஒரு பொருளை வாங்குவதற்கு $3^{1/2}$ கிலோ மீற்றா தொலைவில் உள்ள தனங்கிளப்புப் பிரதேசத்திற்குச் சென்று வாங்க வேண்டியுள்ளது. போக்குவரத்துக்கு ஏதுவான வீதிகளோ அல்லது புனரமைப்புப் பணிகள் இடம்பெறுவதாகவோ இல்லை. இங்கு ஓடுவதற்கு எந்தவிதமான அரச - தனியார் பேருந்துகளோ இன்னும் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை. விதைகளை விதைத்து விட்டு அவற்றினை பராமரிப்பதற்கான போதிய நீரின்மையால் குறைந்த விளைச்சலையே பெற்றுக்கொள்ள முடிகிறது. இதனால் வேற்றுத் தொழில்கள் ஈடுபட வேணடிய கட்டாய நிலையுள்ளது.

இங்கு ஒரு இரவிலோ, பகலிலோ பாம்பு பூச்சிகள் கடித்து விட்டாலோ அல்லது பிரசவவலி, காய்ச்சல் வருத்தம் என்றாலோ அவற்றினைக் காட்டுவதற்கு ஒரு வைத்தியசாலை இங்கு இல்லை. இங்கு முதலில் நெசவுத் தொழிற்சாலை, தும்புத் தொழிற்சாலை, எனப பல தொழிற்சாலைகள் இருந்தன. அப்போது பல பெண்களுக்கும், ஆண்களுக்கும் வேலையில்லாப் பிரச்சனைகள் குறைக்கப்படடன. ஆனால் இன்று இத்தொழிற்சாலை எதுவுமே இல்லை. இத்தொழிற்சாலைகளையும், வீதிகளை புனரமைப்புச் செய்து தரும்படியும், நீர்ப்பிரச்சனையைப் போக்கும் படியும் சம்மந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கு அறிவுறுததியும் இதுவரை 12 வருடங்களாகியும் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை ஐயோ என்று கத்தினால்க் கூட வருவதற்கு ஆட்கள் இல்லாமல் போட்டு என்று தனது ஆதங்கத்தை நீண்ட பிரசங்கம் போல கூறி முடித்தாள் கலைவாணி.

இப்பிரதேசத்தில் இருக்கக்கூடிய ஒரே ஒரு பாடசாலையே சகலகலாவல்லி வித்தியாலயம் ஆகும். இப்பாடசாலையின் முதல்வர் வை. ஜெயகாந்தனைச் சந்தித்த போது அவர் ஒரு பெருமூச்சுடன் கூற ஆரம்பித்தார் இவ்வாறு.

கிராமமும் வாழ்க்கையும் என்று இருந்தவர்கள் 1999ஆம் ஆணடு நாடோடிகளாக அலைந்து திரிந்தார்கள். அந்தந்த பிரதேசத்திற்கு ஏற்ற வாழ்க்கை முறையோடு தம்மை இசைவுபடுத்திக் கொண்டார்கள். இடப்பெயர்வுக்கு முன்னர் 450 மாணவர்களுக்கு மேலே படித்தார்கள். ஆனால் இன்று 74 ஆண்களும், 51 பெண்களுமாக தரம் 1 தொடக்கம் 11 வரையாக 125 மாணவர்களே கல்வி பயிலுகின்றார்கள். இம் மாணவர்களின் பெற்றோர்களில் சிலர் நகரப்புறப் பாடசாலைகளைத் தேடி அவற்றில் சேர்த்ததினால் இப்படியான பாரிய இடைவெளி ஏற்பட்டது. இங்குள்ள மாணவர்கள் யாவரும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்கள் கல்வியில் பின்னடைவுள்ள பிள்ளைகளையே இங்கு சேர்க்கிறார்கள். கல்வித்தரம் கூடிய மாணவர்களை உயர்த்துவது கடினமாகவே இருக்கிறது. இவர்கள் எல்லோரும் கல்வீட்டில் இருந்தாலும், கட்டடங்கள் உயர்ந்தாலும் அவர்களின் மனங்கள் உயரவில்லை, செயற்பாடுகள் உயரவில்லை. என்று கவலை தோய்ந்த முகத்துடன் கூறிய பின்னர் மீண்டும் கவலையுடன் தொடர்ந்தார். இவ்வித்தியாலயத்தில் அண்மையில் பெறுமதியான நான்கு கணனிகள் இரவு வேளைகளில் களவாடப்பட்டது. இங்கு குடிதண்ணீரைப் பெறுவது சிரமம் இதனால் 10 ஆயிரம் லீற்றர் நீரைத் தேக்கி வைக்கக்கூடிய நீர்தாங்கியைக் கட்டி மழைநீரைச் சேகரித்து வைத்திருக்கின்றோம். இவ் நீர்தாங்கியில் உள்ள நீர் ஒரு வருடத்திற்குப் போதுமானது. இவ்வாறான வசதிகளை மக்களுக்கும் ஏற்படுத்திக் கொடுத்தால் அவர்கள் நீருக்கு கால் நடைகள் போல் அலைய வேண்டிய தேவை ஏற்படாது. எம் பாடசாலைக்கு விஞ்ஞான ஆய்வு கூடம், நூலகம், மறைப்புத் தட்டிகள் என்பன தேவைகள் என்று குறிப்பிட்டு நின்றார்.

இப்பிரதேசத்தின் வாழ்வும் வளமும் வரட்சியுற்ற நிலையைக் கொண்டாளும் அவர்களின் அடிப்படைத் தேவைகள் கூட நிறைவேற்றப்பட்வில்லையென்பதும் உண்மை. போரின் எச்சத்திலே பலர் கொல்லப்பட்டும் விதவைகளாகவும் ஒரு நேரச் சாப்பாட்டுக்கு அங்கும் இங்கும் அலைய வேண்டிய நிலை இருப்பதையும் என்பேனா மறுப்பதிற்கில்லை.

கட்டடங்கள் உயர்ந்து கல்வீடுகளாகச் காட்சி தருகின்றனவே தவிர மக்களின் வாழ்வாதாரம் அடிமட்டமாகத்தான் இருக்கின்றது. நகரத்தின் தேவைகளையும் சொகுசையும் விரிவுபடுததிக் கொண்டாலும் கிராமத்தில் இப்படியான கஸ்ரத்தோடும், வேதனையோடும் வாழும் மக்கள் இருக்கும் வரை எப்படித்தான் நகரம் உயர்ந்தெழுந்தாலும் அதனாற் பயன் என்ன? தாங்க முடியாத சோதனைகளுடன் நாட்கள் நகர்ந்து குடிப்பதற்கு தாகம் எடுத்து நாவரண்டு குழந்தைகள் அழுகின்ற வேளை உப்புத் தண்ணீரென்றும் பாாக்காமல் அத்தண்ணீரைக் கொடுக்க வேண்டியிருக்கின்றது. கஸ்ரமும் வாழ்வாகிப் போன மறவன் புலோ மக்கள் தமது கிராமத்தில் மேலே குறிப்பிட்ட மாற்றங்களை எதிர்பார்த்து நிற்கின்றார்கள். இம் மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால் அவர்களின் வாழ்வாதாரம் வாடாத வகையில் வளமாக்கப்பட்டு வாழ்வாங்கு வாழ்வார்கள்.




## மருத்துவம் பேசுகிறது!

# ஆஸ்துமா

S. சதானந்தம்

தமிழ்வாணன் 'வார இதழ் ஆசிரியர்' தம் இதழை நடத்திக் கொணடிருந்த சமயம். கேள்வி - பதில் பகுதி யில் ஒருவர் கேள்வி கேட்டிருந்தார். 'எனக்கு ஆஸ்துமா, கவலையாய் இருக்கிறது. இதுதான் அவர் கேட்டது. இவருக்கு ஆறுதல் சொல்லும் பாணியில் தமிழ்வாணன் சொன்ன பதில்: "கவலைப்பட வேண்டாம், நமது முன்னால் ஜனாதிபதி அவர்களுக்கே ஆஸ்துமா."

ஆஸ்துமா நோய் ஏழைக்கும் வரும், ஜனாதிபதிக்கும் வரும், நுரையீரல் தொடர்பான நோய்களில் ஆஸ்துமா மார்புச் சளியை வெளியேற்ற முடியாமல் இரைப்பையுடன் ஆஸ்துமா நோயின் தாக்குதல் தொடரும்.

இந்நோய் சிலருக்கு விடியற்காலை, சிலருக்கு இரவில் வரலாம். சில பெண்களுக்கு மாதவிலக்கு வரவில்லையென்றால் வரலாம். இந்தியாவில் ஐந்து கோடி மக்கள் ஆஸ்துமா நோயாளிகள்.

### ஆஸ்துமா நோயாளிகள் தவிர்க்க வேண்டியவை

வீட்டுத்தூசி, படுக்கை தூசி, வாகனத்தூசி ஆகியன ஆஸ்துமா நோயாளிகளுக்கு ஒவ்வாமையாகும்.

வளர்ப்பு மிருகங்களான நாய், பூனை ஆகியவற்றின் முடிகள் ஒவ்வாமையை ஏற்படுத்தி 'வீசிங்' ஏற்படுத்த பூனையும் வளர்க்கிறார்கள். சாப்பாட்டு நேரத்தில் சாப்பிடுகிறவர் பக்கத்தில் இருமருங்கிலும் பாடிகார்டு போல் வந்து உட்கார்ந்து கொள்ளும். பிரயாணம் பண்ணி வீடு திரும்பியதும் அவர்களை வரவேற்கும். நாயையும், பூனையையும் கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்து கொஞ்சுவார்கள். இப்போது அந்த வீட்டில் அப்பனுக்கு ஆஸ்துமா, குழந்தைக்கு ஆஸ்துமா, கிழவிக்கு ஆஸ்துமா! சொன்னால் கேட்க மாட்டார்கள். பட்டுத் தெளிய வேண்டியது தான்.

மது அருந்தினால் 'வீசிங்' போய்விடும் என்று நினைத்து தம்பி செபஸ்திராஜ் பீயர் சாப்பிடத் தொடங்கினார். பானை வயிறு ஏற்பட்டுவிட்டது. நுரையீரலின் கீழ் உள்ள அடிச்சவ்வினை அழுத்தி இரைப்பு அதிகமாகிவிட்டது.

இரைப்பு இருந்தால் உடல் உறவு கூடாது. பால், சாக்லேட், ஐஸ்கிரீம், நீர்ச்சத்துள்ள ஆரஞ்சு, இன்ஸ்டன்ட் காப்பி, டீ, கடல் உணவுகள், முட்டை, முட்டை கலந்த கேக், மசாலா உணவுகள், சுண்டல், மஷ்ரூம் இவற்றை ஆஸ்துமா நோயாளி ஒதுக்கிவிட வேண்டும். மது, சிகரெட், பச்சை வாழைப் பழங்களை கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். பவுடர் போடுவதைத் தவிர்க்கணும். கோபம், பயம், பதற்றம் ஆஸ்துமாவைத் தீவிரப் படுத்தும். பிரிட்ஜில் வைக்கப் பட்ட உணவுகள் கூடாது.

**பக்குவம்:** வெந்தயம் சேர்த்த இட்லி நல்லது. கீரை, நார்ச் சத்து மிகுந்த காய்கறிகள், இட்லி, இடியப்பம் சேர்க்கவும். எண்ணெய் இல்லாத சப்பாத்தி சாப்பிடலாம். மோர் சாதத்தில் வெந்நீர் சேர்த்துக் கொள்ளலாம். உலர்ந்த திராட்சை சாப்பிடலாம்.

**மருத்துவம்:** 500 கிராம் ஆடாதோடை இலைகளை நரம்பு நீக்கி பிட்டவியலாய் ஆவியில் அவித்து உலர்த்தவும். அத்துடன் மிளகு 50 கிராம், சுக்கு 25, சித்திரத்தை 100 கிராம் சேர்த்து பவுடராக்கி திரிகடி பிரமானம் தினம் சாபபிடவும் வில்ப இலைத் தூள் தினம் ஒரு ஸ்பூன் வீதம் வாயில் போட்டு நீர் அருந்தவும். மூச்சிரைப்பு இருக்கும் போது இரண்டு கிராம்பையும் இரண்டு ஏலக்காயையும், ஒரு வெற்றிலையையும் போட்டுமென்று விழுங்குவதற்குமுன் ஒரு தேக்கரண்டியளவு தேனையும் சேர்த்து விழுங்கவும்.

**ஓர் அனுபவம்:** மூச்சிரைப்புடன் அவதிப்பட்டுக் கொண்டிருந்த ஓர் ஆஸ்துமா நோயாளியை ஓர் அரசு மருத்துவமனைக்குத் தூக்கிச் சென்றோம். டாக்டர் பென்சிலின் ஊசியைப் போட வந்தார். "பென்சிலின் எனக்கு அலர்ஜி" என்றார் நோயாளி. "நீ டாக்டரா, நான் டாக்டரா?" என்று சொல்லிக் கொண்டே ஊசியைக் குத்தினார் டாக்டர். நோயாளி பிணமாகிவிட்டார்.

"Doctors' blunder are burried in the graveyards" இதைச சொன்னவன் வாய்க்குச் சர்க்கரை போடணும்.

# பல்கலைக்கு தெரிவாகாதோருக்கு அரிய வரப்பிரசாதமாக அமைந்துள்ள பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்

2001ஆம் ஆண்டு முதல் இயங்கிவரும் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் பல ஊடகவியல் பணிகளை ஆற்றிவருகிறது பத்திரிகையியல் பயிற்சிப் பட்டறைகளை ஊடகவியல் ஆர்வலர்களுக்கு வழங்கிவந்த இந்த நிலையமானது 2001ஆம் ஆண்டு முதல் 9 ஊடகவியல் நூல்களை வெளியிட்டுள்ளது. 3 நூல்கள் விரைவில் வெளிவரவுள்ளன.

2011ஆம் ஆண்டில் தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா இணையத்தளத்தையும் 2012 இல் தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா தொலைக்காட்சியையும் ஆரம்பித்துள்ளது.

இந்நிலையத்தினுடைய இன்னுமொரு செயல் பாடாக ஊடகவியல் மாணவர்களுக்கும் வழிகாட்டும் வகையில் ஊடகவியல் பட்டக் கல்வியைக் கற்ற ஒரு அரிய சந்தர்ப்பத்தை வழங்கி நிற்கின்றது. பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைப்பைப் பெற்ற இந்நிலையம் பின்வரும் கற்கைநெறிகளை வழங்கவுள்ளது.

2012இல் ஜீ.சி.ஈ உயர்தர பரீட்சைக்குத் தோற்ற இருப்பவர்கள் உடன் பதிவுகளை மேற்கொண்டு 3 பாடம் சித்தியடைந்த சான்றிதழை 2012 மார்கழி 10ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்தால் விசேட வகுப்புக்களுடன் 2013 மே மாதம் பரீட்சைக்கு தோற்ற விசேட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஜீ.சி.ஈ உயர்தரம் 3 பாடம் சித்தி பெற்றவர்கள்.

டிப்ளோமா கற்கைநெறி - Diploma in Journalism (ஒரு ஆண்டு) - Diploma in Communicative English (ஒரு ஆண்டு) - B.Sc (Visual Communication) கற்கை நெறியை கற்கலாம். (மூன்று ஆண்டுகள்) பட்டப்படிப்பு முடித்தவர்கள் P.G. Diploma (Communicative English) (ஒரு ஆண்டு) - P.G. Diploma in Journalism (ஒரு ஆண்டு) - M.A. (Journalism & Mass Communication) கற்கைநெறியை கற்கலாம். (இரண்டு ஆண்டுகள்) யூலை 2012 இல் கற்கைநெறி ஆரம்பமாகி மே 2013இல் முதல் பரீட்சை எழுதலாம். வகுப்புக்கள் சனி ஞாயிறு தினங்களில் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரரில் நடத்தப் படும்.சனி ஞாயிற்று கிழமைகளில் உறுதிப்படுத்தப் பட்ட பிறப்பு சான்றிதழ், அடையாள அட்டை பிரதி, கல்வி சான்றிதழ், என்பவற்றின் இரண்டு பிரதிகளுடன் இரண்டு பாஸ்போட் அளவு கலர் புகைப்படங்கள், கட்டணம் என்பவற்றுடன் நேரடியாக நிலையத்திற்கு வந்து பதிவுகளை மேற்கொள்ளலாம்.தொடர்புகளுக்கு அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் இல.891, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 222 6085, 021 7200898

பேனாட் ஜோர்ச் புஸ

# இறைத் தியான இல்லத்தில் திருச் சிலுவைப் பாதைத் தியானம்

இவ்வாண்டு தவக் காலத்தைத் தகுந்த முறையில் அனுசரிக்க வேண்டும். அதிலும் குறிப்பாகத் தியான இல்லத்தில் நடைபெறும் தியானங்களில் பங்கெடுக்க வேண்டும் என்ற எமது ஆயரின் அழைப்பிற்கிணங்க, இறைத்தியான இல்லத்தில் தவக்காலத் தியானங்களின் ஒரு பகுதியாக திருச்சிலுவைப் பாதைத் தியானம் நடைபெற்று வந்தது. இறைத் தியான இல்ல இயக்குனர் அருட்தந்தை அ. லோறன்ஸ் அடிகளார் தலைமையில் இறைத் தியான இல்லத் தன்னார்வப் பணியாளர்களால் ஒழுங்கமைத்து வாராந்தம் நடாத்தப்பட்டு வந்த இத்திருச்சிலுவைப் பாதைத் தியானத்தில் அதிகளவான மக்கள் பக்தி பூர்வமாகப் பங்குபற்றி வந்தனர். ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் தியான இல்ல வளவினுள் நடைபெற்ற திருச்சிலுவைப் பாதைத் தியான நிறைவில் அங்கு அமைந்துள்ள கல்வாரிக் குன்றில் அருட்தந்தை அவர்களால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு வந்தது. பக்தி பூர்வமான இத்தியான நிகழ்வு இவ்வாண்டு தொடக்கம் தியான இல்லத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



திருச்சிலுவைப் பாதைத் தியான நிறைவில் அருட்தந்தை அவர்கள் கல்வாரிக் குன்றில் திருப் பலி ஒப்புக்கொடுப்பதை அதில் கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# கடந்த பத்து ஆண்டுகளில் காணாத அளவு 2011ம் ஆண்டு புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது

கடந்த பத்து ஆண்டுகளில் காணாத அளவு 2011ம் ஆண்டு 8 இலட்சம் மக்கள் தங்கள் சொந்த நாடுகளைவிட்டு அண்மைய நாடுகளுக்குப் புலம்பெயரவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று ஐ.நா. அறிக்கை ஒன்று கூறுகிறது.

ஜூன் 20 கடந்த புதனன்று கடைபிடிக்கப்படும் புலம்பெயர்ந்தோரின் உலக நாளையொட்டி அறிக்கை வெளியிட்ட ஐ.நா.வின் புலம் பெயர்ந்தோர் அமைப்பு, கடந்த ஈராண்டுகளில் லிபியா, சொமாலியா, சூடான் ஆகிய நாடுகள் உட்பட பல நாடுகளிலிருந்து மற்ற நாடுகளுக்குப் புலம்பெயரும் மக்களின் எண்ணிக்கை கூடிவந்துள்ளது என்று தெரிவித்துள்ளது.

# ஆரோக்கிய சமூகம் மலர பொறுப்புள்ளோர் முன்வரவேண்டும்

**பங்குத்தந்தை ஜேம்ஸ்நாதன்**

பொறுப்புள்ளவர்கள் பொறுப்புக்களை அலட்சியப்படுத்துவதாலே பொறுப்பற்ற சமூகம் உருவாக்கப்படுகிறது. இதனை எமது குடும்பங்களில் இருந்து உருவாக்குவதில் ஒவ்வொரு பெற்றோரும் தமது பொறுபபுக்களையும் உணர்ந்து வெளிப்படுத்தும் முன்மாதிரிகை மூலமே பிள்ளைகளின் எதிர் காலம் தங்கி உள்ளது என புலோப்பளையில் "கடமைகளும்



உரிமைகளும்" என்ற தலைப்பில் கியூடெக் கரிதாஸ் நிறுவனத்தால் நடாத்தப்பட்ட கருத்தமர்வில் பங்குத் தந்தை ஜேம்ஸ் நாதன் தொடக்கவுரையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் குடும்பத்தின் வாழ்வாதாரம், வரவு, செலவு, ஆன்மீகம், கல்வி, ஆளுமை வளர்ச்சி பற்றிய குடும்ப கலந்துரையாடல் வனமுறை அற்றதான சூழலை மாற்றுவதில் கணவன் - மனைவி பிள்ளைகள் உரையாடலுக்கு சந்தர்ப்பம் கொடுக்கும் குடும்பமே ஆரோக்கிய சூழலை உருவாக்கும் என்றார்.

உணவை கொடுத்தோம், உடையை கொடுத்தோம் பிள்ளைகள் உணர்வதாயில்லை என்று கவலைப்படும் பெற்றோர், கொடுத்தோம் வாங்கினோம் என்பதில்லாமல் எமது கடமையும், பொறுப்பும் சிறுவர்கள் உரிமையும் பாதுகாப்புக்குமான சூழலை ஒவ்வொரு வீட்டிலும் அயல் சூழலிலும் மிக அவதானத்துடனும் அக்கறையுடனும் மனிதனது உரிமைகளை மதிக்கும் பண்பையும் வழங்கும் போது பிள்ளைகளின் எதிர்காலம் நம்பிக்கை உள்ளதாகவும் நன்றி உள்ளதாகவும் அமையும் என வளவாளர் திரு. வசந்தராஜ் தெரிவித்தார்.

பெற்றோரின் குழுக் கலந்துரையாடல் மூலம் குடும்ப ஆவணங்களும் அதன் தேவைகளும் உணரப் பட்டதுடன் சுய கண்காணிப்பின் மூலம் கல்வி, ஆன்மீகம், மனித விழுமியங்கள் பேணும் கருத்துப்பரிமாற்றங்களை கியூடெக் கரிதாஸ் வளவாளர் யோசப் பாலா நெறிப்படுத்தினார். 60க்கு மேற்பட்ட பெற்றோரின பங்கேற்புடன் சமூகமாற்றத்தில பெற்றோரின் கடமைகளையும் பொறுப்புக்களையும் உணர வைத்த நிறைவினை நன்றியால் வெளிப்படுத்தினர்.

# இன்றைய இளையோர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெளிக்கொணர்ந்து இறையாட்சி அமைக்க முன்வர வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் பருத்தித்துறை மறைக் கோட்ட பங்குகளின் கலை நிகழ்வுகள் முறையே பருத்தித்துறை - நடனம், சக்கோடடை - கோலாட்டம், கரவெட்டி - பாடல், பளை - விவாதம், மிருசுவில் - கிராமிய நடனம், மணற்காடு - பாடல், சாவகச்சேரி - கவியரங்கு, அச்சுவேலி - வில்லுப்பாட்டு, தாளையடி - நாடகம் போன்ற நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டது. இந்நிகழ்வுகளுக்கு அனைத்து பங்குத்தந்தையர்களும் ஊக்கமளித்திருந்தனர். இந் நிகழ்வினை பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர். அருட்பணி. மௌலிஸ் அடிகளாரும், பருத்தித்துறை மறைக்கோட்ட இளையோர் ஒன்றிய இணைப்பாளர் அருட்பணி. ஜேம்ஸ் நாதன் அடிகளார் ஆகியோரின் வழிகாட்லில் பருத்தித் துறை மறைக்கோட்ட இளையோர் ஒன்றிய செயற் குழு பிரதிநிதிகள் முன்னெடுத்தார்.

இந் நிகழ்வானது சமகால இளைஞர்கள், யுவதிகள் இறையாட்சி விழுமியங்களை தமதாக்கி, விமர்சனங்களை ஆராய்ந்து தம் கலை ஆற்றல்களை வெளிக்கொணர்ந்த ஓர் இளையோர் எழுச்சி நிகழ்வாக அமைந்திருந்தது.


பொன்விழா வாழ்த்து



எனக்கு வலுவூட்டுகிறவரின் துணை கொண்டு
எதையும் செய்ய ஆற்றல் உண்டு [பிலி:4-13]
இறைபணியில் பொன் விழா காணும்

அருட்சகோதரி
கத்தறின் யோஜ (அ.கா) 1962-2012

இறைவா இதுவரை காலமும் உம் கண்ணின்
மணிபோல் எம் சகோதரியை காத்து வழி
நடத்தியமைக்காகவும் அவருக்கூடாக நீர் செய்த
நன்மைத் தனத்துக்காகவும் நன்றி
இனிவரும் காலமும் அவரோடு பயணித்து உமது
நன்மைத் தனத்தின் கருவியாக பயன்படுத்தி
ஆசீர்த்திட வேண்டுமென்று வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர் - சகோதரர்கள்

Add: 59/12



இசைத் தென்றலுக்கு மேலும் ஒரு கௌரவிப்பு



கனடா சில்லாலை கலாச்சார சங்கத்தின் 10வது ஆண்டு விழாவில் பல்துறைக் கலைஞர் திரு. எம். யேசுதாசன் அவர்கட்கு கனடிய பாராளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபை ஈசன் அவர்கள் மறை இசை மாமணி என்ற பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

Add: 60/12


இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 860, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2012 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.